# POONTAMIL ILAKKANAM

## FORMS I & II

Vidvan, Paloor D. Kannappa Mudaliar

---

V. S. VENKATARAMAN & Co.

Publishers Kumbakonam

AS. 10

புதுமுறைப்

# பைந்தமிழ் இலக்கணம்

I, II படிவங்கள்

[illegible]

[illegible] ஆ. [illegible] முதலியார்

V. S. வெங்கடராமன் கம்பெனி
பப்ளிஷர்ஸ் : : கும்பகோணம்

# புதுமுறைப்

# பூந்தமிழ் இலக்கணம்

## — I & II படிவங்கள் —

[21—8—1951-ல் கல்வியிலாகா வெளியிட்டுள்ள திட்டப்படி
தாய்மொழிப் போதனையில் இரண்டாம் பிரிவுக்குரிய
இலக்கண பாட இயலைத் தழுவியது]


வித்துவான், பாலூர் து. கண்ணப்ப முதலியார்
தலைமைத் தமிழாசிரியர்
கெலலெட உயர்நிலைப் பள்ளி : : திருவல்லிக்கேணி
சென்னை



V. S. வெங்கடராமன் கம்பெனி
பப்ளிஷர்ஸ் : : கும்பகோணம்


உரிமைப் பதிவு ] [ விலை 10 அணு

# முன்னுரை

நடுத்தரப்பள்ளி மாணவர்கள் படித்தறிவதற்கென்று கல்வியிலாகா **21-8-1951**-ல் வெளியிட்டுள்ள பாட இயலை முற்றிலும் தழுவிப் **புதுமுறைப் பூந்தமிழ் இலக்கணம்** என்னும் இந்நூல் எழுதப்பெற்றதாகும்.

இதிற் காணும் விதிகளும் உதாரணங்களும் மாணவர்கள் இன்புடன் எளிதில் உணர்ந்துகொள்ளும் முறையில் அமைந்துள்ளனவாகும். அவர்கள் கற்றுக்கொண்ட இலக்கண அறிவை நிலைநிறுத்தற்பொருட்டு வினாக்களும் பயிற்சிகளும் ஒவ்வோர் இலக்கணப் பகுதியின் இறுதியிலும் தரப்பட்டுள்ளன.

இந் நூலைத் தமிழுலகம் ஏற்று ஆதரிக்க வேண்டுகிறேன்.

'அம்மையப்பா அகம்'
77, அவதானம் பாப்பையா வீதி
சூளை : : சென்னை, 10-10-'51

பாலூர் து. கண்ணப்ப முதலியார்

# உள்ளுறை

## முதற் படிவம்


| எண் | பொருள் | பக்கம் |
|---|---|---|
| I. | எழுத்துக்கள் | 1 |
| II. | சொல்லாக்கம் | 14 |
| III. | தொடர் ஆக்கம் | 16 |
| IV. | சொல் | 22 |
| V. | புணர்ச்சி | 28 |
| VI. | நிறுத்தற் குறிகள் | 33 |


## இரண்டாம் படிவம்


| | | |
|---|---|---|
| I. | எழுத்துக்கள் | 37 |
| II. | சொல்லாக்கம் | 45 |
| III. | சொல் | 49 |
| IV. | புணர்ச்சி | 76 |
| V. | அணி | 84 |
| VI. | நிறுத்தற் குறிகள் | 86 |

# புதுமுறைப்

# பூந்தமிழ் இலக்கணம்

## —முதற் படிவம்—

## I. எழுத்துக்கள்

நம் மனத்தில் தோன்றும் கருத்துக்களைப் பிறருக்குத் தெரிவிக்கும்பொழுது பல சொற்களைக் கொண்டு பேசுகிறோம்; அல்லது எழுதிக் காட்டுகிறோம்.

ஒலி எழுத்து : வரி எழுத்து : ‘முருகா! ஓடி வா’ என்று சொன்னவுடன் அதைச் செவியுற்ற முருகன் நம் கருத்தை அறிந்து ஓடிவருகிறான். ‘முருகா! ஓடி வா’ என்னும் வாக்கியத்தில் முருகா, ஓடி, வா என மூன்று சொற்கள் இருக்கின்றன. வா என்பது ஓர் ஒலியும், ஓடி என்பது இரண்டு ஒலியும், முருகா என்பது மூன்று ஒலியும் பெற்று நிற்கின்றன. இவ் ஒலிகள் இல்லையானால் இச் சொற்களும் இல்லை. இவ்வாறு சொற்கள் உண்டாவதற்குக் காரணமாயிருக்கும் ஒலியே எழுத்து ஆகும்.

எழுத்து, பேச்சளவில் காதால் கேட்கும் முறையிலிருப்பின், அதை ஒலி எழுத்து என்பர். அவ்வொலி எழுத்தைக் கண்ணால் பார்க்கும் முறையில் எழுதப்படின், வரி எழுத்து எனப்படும். ஆகலால், எழுத்துக்கு ஒலி வடிவு, வரி வடிவு என இரண்டு வடிவங்கள் உண்டு. ஒலி எழுத்து பேசுவதிலும், வரி எழுத்து எழுதுவதிலும் உபயோகப்படுகின்றன.

எழுத்துக்களின் வகைகள்: 'அக்கா' என்னும் சொல்லில்,

அ இந்த எழுத்தைத் தனித்து உச்சரிக்கலாம். இது உயிர் எழுத்து எனப்படும்.

க் இவ்வெழுத்தைத் தனித்து உச்சரிக்க முடியாது. இது மெய்யெழுத்து எனப்படும்.

கா (க் + ஆ)—க் என்னும் மெய்யெழுத்துடன் ஆ என்னும் உயிர் எழுத்து சேருவதால் கா ஏற்படுகிறது. இது உயிர்மெய்யெழுத்து எனப்படும்.

இஃது இதில் ஃ ஆய்த எழுத்து எனப்படும்.

இவ்வாறு எழுத்துக்களின் ஒலி வேறுபாடுகளைக்கொண்டு தமிழ் எழுத்துக்களைப் பின்வரும் நான்கு வகைகளாகப் பிரிப்பது வழக்கம்.

1. உயிரெழுத்து: உயிர் பிற ஒன்றின் துணை இல்லாமல் தனியே இயங்கவல்லது. அதுபோலவே, தமிழில் சில எழுத்துக்கள் பிற எழுத்துக்களின் உதவியில்லாமல் இயங்கவல்லன. அவை உயிரெழுத்துக்கள் எனப்படும்.

அ, ஆ, இ, ஈ, உ, ஊ, எ, ஏ, ஐ, ஒ, ஓ, ஔ—என உயிரெழுத்துக்கள் 12 ஆகும்.

2. மெய்யெழுத்து: மெய் என்னும் சொல்லுக்கு உடம்பு என்பது பொருள். உடம்பு உயிரில்லாவிட்டால் அசைவற்றுக் கிடக்கும். அவ்வுடம்பு நடமாடவேண்டுமானால், அதற்கு உயிரின் உதவி தேவையாகும். அதுபோலவே தமிழில் சில எழுத்துக்கள் உயிரெழுத்தின் உதவியின்றித் தனித்து ஒலிக்கமாட்டா. மெய் (உடம்பு) போலுள்ள இவ்வெழுத்துக்கள் மெய்யெழுத்துக்கள் எனப்படுகின்றன.

க், ங், ச், ஞ், ட், ண், த், ந், ப், ம், ய், ர், ல், வ், ழ், ள், ற், ன்—என மெய்யெழுத்துக்கள் 18 ஆகும்.

குறிப்பு : க், ங், ச் என்ற மெய்யெழுத்துக்களை உச்சரியுங்கள். இக், இங், இச் என்றுதான் உச்சரிப்பீர்கள். இதனால் என்ன அறிகிறீர்கள ? மெய்யெழுத்துக்கள் உச்சரிக்கப் படவேண்டுமானால், உயிரெழுத்தின் உதவி வேண்டு மென்பதல்லவா ?

மெய்யெழுத்துக்கள் எப்பொழுதும் தலையில் புள்ளிபெற்றே வரும். (உ-ம்) க், ண், ப், வ்.

3. உயிர்மெய்யெழுத்து : ட என்னும் எழுத்தை உச்சரித்துப் பாருங்கள். ட்+அ என்னும் ஓசை வருதலை உணருவீர்கள். ஆகவே, ட என்னும் எழுத்தில் எந்தெந்த எழுத்துக்கள் சேர்ந்திருக் கின்றன ? ட் என்னும் மெய்யெழுத்தும், அ என்னும் உயிரெழுத்தும் சேர்ந்து ட என்ற எழுத்து உண்டாகிறது. இத்தகைய எழுத்துக்களே உயிர்மெய்யெழுத்துக்கள் எனப்படும்.

உயிரெழுத்தும் மெய்யெழுத்தும் கூடி உண்டா கும் எழுத்து உயிர்மெய்யெழுத்து ஆகும்.


பதினெட்டு மெய்யெழுத்தோடும் பன்னிரண்டு உயிரெழுத்தும் தனித்தனி சேர்தலால் (18 × 12 = 216) இருநூற்றுப்பதினாறு உயிர்மெய்யெழுத்துக்கள் உண்டாகும்.

அடுத்த பக்க அட்டவணையில் க முதல் னௌ ஈறாகவுள்ள 216 உயிர்மெய் எழுத்துக்களும் அமைவதைக் காண்க.

குறிப்பு : ஒவ்வொரு மெய்யெழுத்தும் அ என்ற உயிரெழுத்துடன் சேரும்பொழுது புள்ளி நீங்கியும், ஆ, இ, ஈ போன்ற ஏனைய உயிரெழுத்துக்களுடன் சேரும்போது உருவம் மாறியும் நிற்கும்.

# உயிர்மெய்யெழுத்துக்கள்


| மெய் | உயிர் 12 | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 18 | அ | ஆ | இ | ஈ | உ | ஊ | எ | ஏ | ஐ | ஒ | ஓ | ஔ |
| க் | க | கா | கி | கீ | கு | கூ | கெ | கே | கை | கொ | கோ | கௌ |
| ங் | ங | ஙா | ஙி | ஙீ | ஙு | ஙூ | ஙெ | ஙே | ஙை | ஙொ | ஙோ | ஙௌ |
| ச் | ச | சா | சி | சீ | சு | சூ | செ | சே | சை | சொ | சோ | சௌ |
| ஞ் | ஞ | ஞா | ஞி | ஞீ | ஞு | ஞூ | ஞெ | ஞே | ஞை | ஞொ | ஞோ | ஞௌ |
| ட் | ட | டா | டி | டீ | டு | டூ | டெ | டே | டை | டொ | டோ | டௌ |
| ண் | ண | ணா | ணி | ணீ | ணு | ணூ | ணெ | ணே | ணை | ணொ | ணோ | ணௌ |
| த் | த | தா | தி | தீ | து | தூ | தெ | தே | தை | தொ | தோ | தௌ |
| ந் | ந | நா | நி | நீ | நு | நூ | நெ | நே | நை | நொ | நோ | நௌ |
| ப் | ப | பா | பி | பீ | பு | பூ | பெ | பே | பை | பொ | போ | பௌ |
| ம் | ம | மா | மி | மீ | மு | மூ | மெ | மே | மை | மொ | மோ | மௌ |
| ய் | ய | யா | யி | யீ | யு | யூ | யெ | யே | யை | யொ | யோ | யௌ |
| ர் | ர | ரா | ரி | ரீ | ரு | ரூ | ரெ | ரே | ரை | ரொ | ரோ | ரௌ |
| ல் | ல | லா | லி | லீ | லு | லூ | லெ | லே | லை | லொ | லோ | லௌ |
| வ் | வ | வா | வி | வீ | வு | வூ | வெ | வே | வை | வொ | வோ | வௌ |
| ழ் | ழ | ழா | ழி | ழீ | ழு | ழூ | ழெ | ழே | ழை | ழொ | ழோ | ழௌ |
| ள் | ள | ளா | ளி | ளீ | ளு | ளூ | ளெ | ளே | ளை | ளொ | ளோ | ளௌ |
| ற் | ற | றா | றி | றீ | று | றூ | றெ | றே | றை | றொ | றோ | றௌ |
| ன் | ன | னா | னி | னீ | னு | னூ | னெ | னே | னை | னொ | னோ | னௌ |



ஆய்த எழுத்து



வேலாயுதம்



அடுப்புக் குமிழ்கள்

**4. ஆய்த எழுத்து:** இந்தப் படங்களைப் பாருங்கள். முதலில் இருப்பது வேலாயுதம். வேலில் மூன்று கூர்கள் இருக்கின்றன. இரண்டாவது இருப்பது ஓர் அடுப்பு. அதில் மூன்று குமிழ்கள் இருக்கின்றன.

வேலாயுதத்தின் கூர்களைப் போன்றாவது, அடுப்புக் குமிழ்களைப் போன்றாவது மூன்று புள்ளிகளினால் எழுதப்படும் எழுத்துக்கு ஆய்த எழுத்து (ஆயுதம் போன்ற எழுத்து) என்பது பெயர். இதனை அஃகேனம் என்றும் கூறுவர். ஆய்த எழுத்து ஒரு சொல்லின் இடையில்தான் வரும். உ-ம்) **அஃது, இஃது,** எஃகு.

குறிப்பு: உயிர் 12, மெய் 18, உயிர்மெய் 216, ஆய்தம் 1 ஆக 247 எழுத்துக்களே தமிழ்மொழியில் உள்ளன.

குற்றெழுத்து, நெட்டெழுத்து : அந்த ஆலமரம்—அ, ஆ இவை ஒவ்வொன்றையும் உச்சரி. அ குறுகிய ஓசையுள்ளதால் அது குற்றெழுத்து எனப்படும். ஆ நீண்ட ஓசையுள்ளதால் அது நெட்டெழுத்து எனப்படும்.

அ, இ, உ, எ, ஒ இந்த ஐந்தும் குற்றெழுத்துக்கள்.

ஆ, ஈ, ஊ, ஏ, ஐ, ஓ, ஔ இந்த ஏழும் நெட்டெழுத்துக்கள்.


உயிர்மெய்யெழுத்துக்களிலும் குற்றெழுத்துக்கள், நெட்டெழுத்துக்கள் இருப்பதைக் கவனி. (உ-ம்) க, கா ; டி, டீ ; மொ, மோ.

குறிப்பு : இக் குற்றெழுத்துக்களும் நெட்டெழுத்துக்களும் ஒலியால் வேறுபடுவனவாகும்.

ல, ள, ழ ; ன, ண, ந ; ர, ற : இவ்வெழுத்துக்கள் உச்சரிப்பில் வேறுபடுவதையும், அவை வரும் சொற்கள் பொருளில் வேறுபடுவதையும் இங்கே கவனிப்போம்.

இவ் எழுத்துக்களை ஒன்றுக்கொன்று மாற்றி எழுதினால் சொல்லின் பொருளே வேறுபட்டுவிடும். உதாரணமாக, கல் என்பதற்கும், கள் என்பதற்கும் பொருளில் எவ்வளவு வேறுபாடு இருக்கிறது என்பதை அறிவீர்கள். தவலையும் தவளையும் ஒன்றாகி விடுமா? ஆகவே, மேலே சொல்லிய எழுத்துக்கள் வரும் சொற்களை மிக எச்சரிக்கையுடன் எழுதுதல் தேவையாகும். இல்லாவிடில், அச் சொற்களின் அர்த்தம் அனர்த்தமாகிவிடும்.

ல, ள, ழ எழுத்துக்களை மாற்றித் தவறுதலாகச் சொற்களில் எழுதுவதற்குக காரணம் அவ்வெழுத்துக்களின் உச்சரிப்பைச் சரியாகப் பழகிக் கொள்ளாமையே யாகும். ஆதலால், அவற்றைத் திருத்தமாக உச்சரிக்கும் முறையை அறிந்து கொள்வோமாக.





ல, ள, ழ இவற்றின் உச்சரிப்பு: மேல்வாய்ப் பல்லின் அடிப்புறத்தை நாக்கின் நுனி சிறிது தொடும்படி செய்து லகரத்தை உச்சரிக்கவேண்டும். மேல்வாயை நாவின் ஓரம் உள் மடிந்து அழுத்தித் தடவினால் ளகரம் பிறக்கும். மேல்வாயை நாவின் நுனி சிறிது தடவி ழகரத்தை உச்சரித்தல் வேண்டும்.

உச்சரித்துப் பழகுக: பல பல, பள பள, வழ வழ.

| | | | |
|---|---|---|---|
| தலை | கலை | வால் | ஆல் |
| தளை | களை | வாள் | ஆள் |
| தழை | கழை | வாழ் | ஆழ் |


வாழை இலை : காலை வேளை




ந, ன, ண இவற்றின் உச்சரிப்பு: நுனி நாக்கை மேல்வாய்ப் பல்லின் அடியில் சிறிது பொருந்தச் செய்தால் நகரம் பிறக்கும். நுனி நாக்கை மேல் வாய்ப் பல்லின் அடியில் நன்றாகப் பொருத்தி னகரத்தை உச்சரித்தல்வேண்டும். நுனி நாக்கை மடித்து, மேல்வாயின் நுனியோடு பொருந்தச் செய்து ணகரத்தை உச்சரித்தல் வேண்டும்.

உச்சரித்துப் பழகுக :

| | | |
|---|---|---|
| மனம் | கன்னன் | பன்னீர் |
| மணம் | கண்ணன் | தண்ணீர் |
| மந்தம் | கந்தன் | வெந்நீர் |




ர, ற இவற்றின் உச்சரிப்பு: மேல்வாயை நாக்கின் நுனி மெதுவாகத் தடவும்போது ரகரம் பிறக்கும். மேல்வாயை நாக்கின் நுனி நன்ருகப் பொருந்தி அழுத்துமாறு றகரத்தை உச்சரிக்கவேண்டும்.

உச்சரித்துப் பழகுக:

| | | | | |
|---|---|---|---|---|
| பரம | உரவு | அரை | பரி | கூரிய |
| பறம | உறவு | அறை | பறி | கூறிய |

ர, ற எழுத்துக்கள் வரும்பொழுது பொருள் வேறுபடும்: ர, ற என்ற எழுத்துக்கள் ஒரே ஓசையுள்ளவைபோலத் தோன்றினாலும், அவை வரும் சொற்களில் பொருள் வேறுபடும்.

உதாரணம் :

| | | | | | |
|---|---|---|---|---|---|
| அரம் | — | ஒரு கருவி | அறம் | — | தருமம் |
| அருகு | — | பக்கம் | அறுகு | — | ஒரு புல் |
| அரை | — | பாதி | அறை | — | வீட்டினறை |
| இரை | — | தீனி | இறை | — | அரசன் |
| உரவு | — | வலிமை | உறவு | — | சுற்றம் |
| கரை | — | குளக்கரை | கறை | — | குற்றம் |
| கூரிய | — | கூர்மையான | கூறிய | — | சொல்லிய |
| திரை | — | திரைச்சீலை | திறை | — | கப்பம் |
| பரி | — | குதிரை | பறி | — | பிடுங்கு |
| மரை | — | மான் | மறை | — | வேதம் |

லகர, ளகர, ழகர எழுத்துக்கள் : ல, ள, ழ என்ற எழுத்துக்கள் ஒரே ஓசையுடையனபோலத் தோன்றினாலும், பொருளில வேற்றுமை உண்டு. ஆகையால், மாணவர்கள் அவற்றை நன்கு அறிந்து வழங்குதல்வேண்டும்.

உதாரணம் :

| | | | | | |
|---|---|---|---|---|---|
| அலை | — | கடலின் அலை | கிலி | — | பயம் |
| அளை | — | தயிர் | கிளி | — | ஒரு பறவை |
| அழை | — | கூப்பிடு | கிழி | — | கிழித்தல் |
| இலை | — | மரத்தின் இலை | தலை | — | ஓர் உறுப்பு |
| இளை | — | மெலிதல் | தளை | — | கட்டு |
| இழை | — | நூல் | தழை | — | இலை |
| ஒலி | — | ஓசை | வலி | — | வலிமை |
| ஒளி | — | வெளிச்சம் | வளி | — | காற்று |
| ஒழி | — | அழி | வழி | — | பாதை |
| கலி | — | துன்பம் | வால் | — | ஓர் உறுபபு |
| களி | — | மகிழ்ச்சி | வாள் | — | வாளாயுதம் |
| கழி | — | உப்பங்கழி | வாழ் | — | வாழ்தல் |

நகர, னகர, ணகர எழுத்துக்கள்: ந, ன, ண என்ற எழுத்துக்கள் ஒரே ஓசையுடையனபோலத் தோன்றினும். சொற்களில் வரும்போது பொருளில் வேற்றுமை உண்டு. ஆதலால், மாணவர்கள் அவற்றை நன்கு அறிந்து வழங்குதல்வேண்டும்.

(உ-ம்)

| | | | |
|---|---|---|---|
| அந்நாள் | — அந்த நாள் | அன்னாள் | — அவள் |
| முந்நாள் | — மூன்று நாள் | முன்னாள் | — முந்திய நாள் |
| உன்னல் | — நினைத்தல் | உண்ணல் | — உண்ணுதல் |
| கன்னி | — பெண் | கண்ணி | — வலை |
| தினை | — ஒரு தானியம் | திணை | — குலம் |
| முந்நூறு | — மூன்று நூறு | முன்னூறு | — முந்திய நூறு |
| பனி | — குளிர்ச்சி | பணி | — வேலை |
| இவன் | — சுட்டுப் பெயர் | இவண் | — இவ்விடம் |
| ஊன் | — மாமிசம் | ஊண் | — உணவு |
| பேன் | — ஒரு ஜந்து | பேண் | — காப்பாற்று |
| தன்மை | — இயற்கை | தண்மை | — குளிர்ச்சி |
| எந்நாடு | — எந்த நாடு | என்னாடு | — எனது நாடு |

பயிற்சி

I. 1. காக்கை காகா என்று கரைகிறது.
2. அடிகாள் உந்தம் மலரடி தொழுதோம்.
3. எஃகு ஓர் உறுதியான உலோகம்.
4. மலர் சிலம்படி வாழ்த்தி வணங்குவாம்.
5. அன்னவர்க்கே சரண் நாங்களே.
6. எழுத்தறிவித்தவன் இறைவனாகும்.
7. அஃகுஞ் சுருக்கேல்.

மேற்கண்ட வாக்கியங்களிலுள்ள எழுத்துக்களை வகைப்படுத்தி இக் கட்டங்களில் எழுதுக :

| உயிர் | மெய் | உயிர்மெய் | ஆய்தம் |
|---|---|---|---|
| | | | |

II. உயிர்மெய்யாகச் சேர்த்து எழுதுக :

(உ-ம்) ட்+ஐ=டை.

ப்+ஔ= ம்+ஈ= ழ்+உ= ற்+ஓ =

க்+ஊ = ல்+ஐ= ச்+எ= த்+ஊ=

III. உயிர், மெய் பிரித்தெழுதுக :

(உ-ம்) போ = ப் + ஓ.

மை, ஞே, வீ, து, னே, ரு, வு, ரி, சோ, ளு, கௌ, பூ.

IV. இவற்றைச் சேர்த்துச் சுருக்கி எழுதுக :

(உ-ம்) அந்த+நாள் = அந்நாள்.

மூன்று நாள், முந்திய நாள்; என்னுடைய நாடு, எம்முடைய நாடு; தம்முடைய நலம், தன்னுடைய நலம்.

V. பின்வரும் சொற்களின் பொருள் வேறுபாட்டை விளக்குக :

கலம், களம்; வாலை, வாளை, வாழை; விலை, விளை; அரம், அறம்; கன்னி கண்ணி; ஒலி, ஒளி, ஒழி.

VI. பின்வரும் வாக்கியங்களிலுள்ள எழுத்துப் பிழைகளைத் திருத்தி எழுதுக :

1. அரஞ் செய விரும்பு.
2. தன்தை தாய்ப் பேன்.
3. வெந்ீரில் தலை முழுகினான்.
4. காலை மாடு தலையை மேய்ந்தது.
5. புரங் கூரித் திறியாதே.
6. சூரியன் ஒலியுடையவன்.
7. அச்சங் கொல்லாதே.

VII. பின்வரும் வாக்கியங்களிலுள்ள உயிரெழுத்துக்களில் குற்றெழுத்து, நெட்டெழுத்துக்களைக் கண்டெழுதுக :

அந்த ஆலமரம் ஓங்கி வளர்ந்திருக்கிறது.
ஐயப்பன் ஓடுவதை ஔவை கண்டாள்.
இஃது ஓர் ஈய ஊதல்.
எங்கே ஏர் உழுதான் ?

### வினுக்கள்

1. ஒலி எழுத்து, வரி எழுத்து,—இவற்றின் வேறுபாட்டை விளக்குக.

2 தமிழ்மொழியிலுள்ள நான்குவகை எழுத்துக்கள் யாவை ? பெயர்க் காரணமும் கூறுக.

3. உயிரெழுத்துக்களைக் குறில், நெடில் என எவ்வாறு பிரிக்கலாம் ?

4. தமிழ் நெடுங்கணக்கில் உயிரெழுத்து எத்தனை ? மெய்யெழுத்து எத்தனை ? உயிர்மெய்யெழுத்து எத்தனை ?

5. ஆய்த எழுத்து அமைந்த சொற்கள் நான்கினை எழுதுக.

6. ல ள ழ, ன ண ந, ர ற,—இவைகளை எவ்வாறு உச்சரிக்கவேண்டும் ?

7. ல ள ழ, ன ண ந, ர ற,—இவை வரும் சொற்களில் பொருள் வேற்றுமைக்கு இரண்டிரண்டு உதாரணங்கள் தருக.

---

# II. சொல்லாக்கம்

**எழுத்துக்களால் சொல் அமைதல் :** பூ, தீ, போ, வா, மை, பை, நீ, ஈ, கை, தை இந்த ஒவ்வோர் எழுத்தும் தனித்து நின்று ஒரு பொருளை உணர்த்துகிறது. இவை ஓரெழுத்துச் சொற்கள் ஆகும். இலை, படம், விலங்கு இவை இரண்டு முதலான எழுத்துக் களாலாகிய சொற்கள் ஆகும்.

எழுத்துக்கள் தனித்து நின்று, அல்லது இரண்டு முதலாகத் தொடர்ந்து நின்று ஒரு பொருளைத் தெரிவிப்பது சொல் (=பதம்) ஆகும்.

**பகுபதம் : பகாப்பதம :** சொற்களுள் சில பொருள் கெடாத வகையில் பிரிக்கக்கூடியன வாயும, சில பிரிக்கக்கூடாதனவாயும் உள்ளன.

கூன் என்னும் சொல்லைப் பொருள் கெடாத வகையில் பிரிக்க முடியாது. ஆனால் கூனன் என்ற சொல்லைக் கூன்+அன் எனப் பொருள் கெடாத வகையில் பிரித்துக் காட்டலாம்.

இவ்வாறு பொருள் கெடாதவகையில் பிரிக்கக் கூடிய பதத்தைப் பகுபதம் என்பர்; பிரிக்க இயலாத பதத்தைப் பகாப்பதம் என்பர்.

(உ-ம்.) கண், மரம், மலை, வா,
உண், நட —பகாப் பதங்கள்.
கண்ணன், மதுரையான், மலையன்,
வருகிறான், உண்டான், நடப்பான்
—பகுபதங்கள்.

**பகுதி :** கூனன் என்னும் பகுபதச் சொல்லில் முதலில் நிற்கும் உறுப்பு கூன் ஆகும். ஆகவே, கூன் பகுதியாகும்.

உண்டான் என்னும் பகுபதத்தில் முதலில் நிற்கும் உறுப்பு உண். ஆதலால், உண் அச்சொல்லின் பகுதி எனப்படும்.

பகுபதத்தில் முதலில் நிற்பது பகுதியாகும். இறுதியில் நிற்பது விகுதியாகும்; இடையில் நிற்பது இடைநிலையாகும்.

(உ-ம்.) வலைஞன் = வலை + ஞ் + அன். இப்பகுபதத்தில் வலை-பகுதி; ஞ்-இடைநிலை; அன்—விகுதி.

உண்டான் = உண் + ட் + ஆன். இதில் உண்-பகுதி ; ட் — இடைநிலை ; ஆன் — விகுதி.

குறிப்பு : பகுதியினைக் கண்டுபிடித்தல் வெகு எளிது. பெயர்ப் பகுபதமானால், பெயர்ச் சொல் பகுதியாக வரும். வினைப் பகுபதமானால் வினைச்சொல் பகுதியாகும். வினைச்சொல் பகுதி கட்டளையிடுவதுபோல் நிற்கும்.

(உ-ம்) வலைஞன் என்னும் பெயர்ப் பகுபதத்தில் வலை என்னும் பெயர்ச்சொல் பகுதியாகும்.

உண்டான் என்னும் வினைப் பகுபதத்தில் உண் என்னும் வினைச்சொல் பகுதியாகும்.

பயிற்சி

1. ஓரெழுத்துச் சொற்கள், ஈரெழுத்துச் சொற்கள், பல எழுத்துச் சொற்கள் இவைகளுக்கு முறையே நான்கு நான்கு உதாரணங்கள் தருக.

2. இவை ஒவ்வொன்றுக்கும் அதே பொருளுள்ள ஓரெழுத்துச் சொல் கூறுக :

பெரிய, நாக்கு, பசு, நெருப்பு, மலர்.

3. கீழே காணும் சொற்களில் எவை பகுபதம்? எவை பகாப்பதம்?

ஊர், வேலன், மணம், மதுரையான், கொம்பு, பொன்னன், ஓணன், இடையர், அழகன், முருகன், சனி, உண்டான், காலை.

4. இவ்வெழுத்துக்களைச் சொற்களாக அமை :

ன்ணீதர், ரைதிகு, கள்ழங்ப, ந்ழதைகு, வீங்குல.

5. கீழ்வருவனவற்றில் பகுதியை மட்டும் எடுத்து எழுது :

பெற்றான், நடந்தான், சென்றாள், கூலிக்காரி, [illegible]வான், எறிந்தான், வேண்டாமை.

வினாக்கள்

1. சொல் என்பது யாது?

2. பகுபதம், பகாப்பதம் இவற்றின் வேறுபாட்டை உதாரணங்களால் விளக்குக.

3. பகுதி என்பது யாது?

# III. தொடர் ஆக்கம்

முருகா! உன் புஸ்தகத்தையும் சிலேட்டையும் எடு.

இதில் முருகா, உன், எடு இவை தமிழ்ச்சொற்கள்.

புஸ்தகம் — வடமொழிச் (ஸம்ஸ்கிருத) சொல்.

சிலேட்டு — ஆங்கில மொழிச் சொல்.

இவ்வாறு தமிழ் மொழியில் பிறமொழிச் சொற்கள் கலந்திருக்கின்றன. அவற்றிற்கும் இலக்கணம் கூறி ஏற்றுக்கொள்வது தமிழர் மரபாக இருந்து வருகிறது.

வடமொழிச் சொற்கள்: ஜ, ஷ, ஸ, ஹ, க்ஷ என்ற வடமொழி எழுத்துக்கள் தமிழ் நெடுங் கணக்கில் சேர்க்கப்பட்டுள்ளன. இவ்வெழுத்துகள் உள்ள வார்த்தைகளை வடமொழிச் சொற்கள் என்று எளிதில் அறியலாம். (உ-ம்) பக்ஷணம், ஜாதகம், ஹாரம், மாஸம், வருஷம்.

கமலம், காரணம், குங்குமம் போன்ற வடமொழி சொற்கள் தமிழுக்கும் வடமொழிக்கும் பொதுவாக வுள்ள எழுத்துக்களால் அமைந்து, எவ்வித மாறுதலுமின்றித் தமிழ்மொழியில் கலந்துள்ளனவாகும். ஆனால், பெரும்பாலான வடமொழிச் சொற்களி லுள்ள வடமொழி எழுத்துக்கள் தமிழில் வரும் போது தமிழ் எழுத்துக்களாகத் திரிந்து வழங்கும். (உ-ம்)

| | | |
|---|---|---|
| 1. | ஜயம் — சயம்<br>ஜலம் — சலம் | ஜ — ச ஆயிற்று. |
| 2. | புஜம் — புயம்<br>பங்கஜம் — பங்கயம் | ஜ — ய ஆயிற்று. |
| 3. | ஷண்முகம் — சண்முகம் | ஷ — ச ஆயிற்று. |
| | விஷம் — விடம்<br>புஷ்பம் — புட்பம் | ஷ — ட ஆயிற்று. |
| 4. | பக்ஷம் — பட்சம்<br>பரீக்ஷை — பரீட்சை | க்ஷ — ட்ச ஆயிற்று. |

5. ஸமயம் — சமயம் ஸ — ச ஆயிற்று.
மாஸம் — மாதம் ஸ — த ஆயிற்று.

6. ஹரன் — அரன்
ஹிமயமலை — இமயமலை } ஹ — உயிராயிற்று.
தேஹம் — தேகம
மஹிமை — மகிமை } ஹ — க ஆயிற்று.

திசைச் சொற்கள்: தமிழ்ச்சொல், வடசொல் இவற்றைத் தவிரத் தமிழில் வந்துள்ள மற்றைய எந்த மொழிச் சொற்களையும் திசைச்சொல் என்பர். செந்தமிழ் நாட்டுக்குப் புறம்பாகவுள்ள பல திசைகளிலும் வழங்குகின்ற மொழிகளிலிருந்து தமிழில் வந்து வழங்கும் சொல் திசைச்சொல்லாம்.

(உ-ம்)

1. வேடிக்கை, எச்சரிக்கை, கெம்பு, செப்பு (சொல்லு) — தெலுங்கு நாட்டுச் சொற்கள்.
2. சிக்குதல் — கன்னட நாட்டுச் சொல்.
3. ஜன்னல், சாவி, அலமாரி — போர்த்துகீசியச் சொற்கள்.
4. அசல் ஜரூர், ஜாகீர், ஜமாபந்தி, ஸலாம் — உருது மொழிச் சொற்கள்.
5. கோர்ட்டு, ஷாப், ஸ்கூல், பென்சில் — ஆங்கில மொழிச் சொற்கள்.

வழூஉச் சொற்கள்: வாழைப்பழம் என்பதை வாயப்பளம் என்று எத்தனை பேர் வழங்குகின்றனர்? [illegible] அல்லவா? அதுபோலவே எண்ணெய், [illegible], [illegible], அரிவாள்மனை என்ற சொற்களை [illegible] [illegible], தலகாணி, புஞ்சை, அருவாமணை [illegible] உச்சரிக்கிறோம்; எழுதுகிறோம். [illegible] மொழியில் பல சொற்கள் உரு [illegible] வழங்கப்படுகின்றன. இவ்விதப் [illegible] சொற்களை வழூஉச்சொற்கள் என்கிறோம்.

சொற்களைப் பிழைபட எழுதினால் பொருள் வேறுபடும்; அல்லது பொருளே தெரியாமற்போகும். சொற்களின் மூல உருவம் இன்னதென்பதைக கவனித்து உணர்ந்தாலும், அல்லது சொற்பொருளை அறிந்தாலும் இப்பிழைகளைத் (= வழூஉக்களை) தவிர்க்கலாம்.

கீழ்வரும் வழூஉச் சொற்களையும் அவற்றின் திருத்தத்தையும் ஊன்றிக் கவனித்து, மனத்தில் இருத்திக்கொள்ளுங்கள். அவ்வாறு செய்வதால் பேசும்பொழுதும், கட்டுரை எழுதும்போதும் பிழைகள் நேரிடமாட்டா.

| பிழை : | திருத்தம் | பிழை : | திருத்தம் |
|---|---|---|---|
| அடமழை | அடைமழை | தலைகாணி | தலையணை |
| அமக்களம் | அமர்க்களம் | தவக்களை | தவளை |
| அரணாக்கயிறு | அரைஞாண் கயிறு | தாவாரம் | தாழ்வாரம் |
| | | திரேகம் | தேகம் |
| அருவாமனை | அரிவாள்மணை | துடை | தொடை |
| இடை போடு | எடை போடு | நஞ்சை | நன்செய் |
| இமையமலை | இமயமலை | பாவக்காய் | பாகற்காய் |
| எண்ணை | எண்ணெய் | புஞ்சை | புன்செய் |
| ஒண்டியாய் | ஒன்றியாய் | புண்ணாக்கு | பிண்ணாக்கு |
| கடவாய் | கடைவாய் | மணத்தக்காளி | மணித்தக்காளி |
| கண்டராவி | கண்ணராவி | | |
| கார்க்கும் | காக்கும் | முந்தாணி | முன்தானை |
| காக்ஷி | காட்சி | முழிக்கிறான் | விழிக்கிறான் |
| குடுத்தான் | கொடுத்தான் | மோர்ந்து | மோந்து |
| கோர்த்து | கோத்து | ரொம்ப | நிரம்ப |
| சிலவு | செலவு | வயறு | வயிறு |
| சுவற்றில் | சுவரில் | வெண்ணை | வெண்ணெய் |
| சேதி | செய்தி | வென்னீர் | வெந்நீர் |

வழக்கு : சொற்கள் வழங்கும் முறைக்கு வழக்கு (=சொல்நடை = வழக்கம்) என்பது பெயர். அஃது இயல்பு வழக்கு (இயல்பாய் வருவது), தகுதி வழக்கு (சந்தர்ப்பத்துக்குத் தக்கதாயுள்ளது) என இரு வகைப்படும். இந்த உதாரணங்களைக் கவனியுங்கள்:

1. நிலம், வீடு, குளம்—இச் சொற்கள் இலக்கண முறையில் வருவனவாம். இவ்வகைச் சொல் இலக்கணமுடையது எனப்படும்.

| இலக்கணப் போலி | : | இலக்கணமுடையது |
|---|---|---|
| 2. முன்றில் | — | இல்முன் |
| வாயில் | — | இல்வாய் |
| புறநகர் | — | நகர்ப்புறம் |
| வாய்க்கால் | — | கால்வாய் |

என்னும் சொற்கள் முன்பின்னாக மாறிவந்தன. இம்மாதிரிச் சொற்கள் இலக்கணப் போலி எனப்படும்.

| மரூஉ | : | இலக்கணமுடையது |
|---|---|---|
| 3. அருமந்தபிள்ளை | — | அருமருந்தன்ன பிள்ளை |
| சோணாடு | — | சோழ நாடு |
| ஆனை | — | யானை |
| பேர் | — | பெயர் |

என்னும் சொற்கள் சொல் வடிவு மாறி, மருவி வந்தன. இவ்விதச் சொற்கள் மரூஉ என்று சொல்லப்படும்.

இலக்கணமுடையது, இலக்கணப் போலி, மரூஉ என இயல்பு வழக்கு மூவகைப்படும்.

தகுதி வழக்கு. இவற்றைக் கவனியுங்கள் :

1. [illegible] வந்தான்: மலங்கழுவி என்னும் [illegible] சொற்களை மறைத்து, வேறுவகை [illegible] கூறியிருக்கும். இவ்விதம் கூறுவது இடக்கர் [illegible] எனப்படும்.

2. தாலி பெருகிற்று. (தாலி அறுந்தது)
நன்காடு (சுடுகாடு)
காலஞ் சென்றார். (இறந்தார்)

மங்கலமல்லாத சொல்லை நீக்கி, மங்கலமான சொல்லை வழங்குவது மங்கலம் ஆகும்.

3. பறி—பொன்னைக் குறிக்கத் தட்டார் குழுவினர் வழங்குவது.
சொல்விளம்பி—கள்ளைக் குறிக்க வேடர் குழுவினர் வழங்குவது.

ஒரு கூட்டத்தார் சில சொற்களுக்கு ஈடாக வேறு சொற்களைக் குறிப்பாக வழங்குவது குழூஉக்குறி என்று சொல்லப்படும்.

மேற்கண்டவாறு பெரியோர் முன்னிலையில் சொல்லத்தகாத சொற்களை மாற்றித் தகுதியறிந்து சொற்களை வழங்குவது தகுதி வழக்கு எனப்படும்.

இடக்கரடக்கல், மங்கலம், குழூஉக்குறி எனத் தகுதி வழக்கு மூவகைப்படும்.

பயிற்சி

1. பின்வருஞ் சொற்களை இக் கட்டங்களில் வகைப் படுத்தி எழுதுக:

| தமிழ்ச் சொல் | வட சொல் | திசைச் சொல் |
|---|---|---|
| | | |

பங்கஜம், கார்டு, பாடல், கலெக்டர், கச்சேரி, காற்றுடி, ரதம், சலாம், பென்சில், அரசன், செப்பு, சோப்பு, புகழ், ஸரஸ்வதி, கமலம், எச்சரிக்கை, அலமாரி, அசல்.

2. அடியிற்காணும் வடமொழிச் சொற்கள் தமிழில் எவ்வாறு திரிந்து வழங்கப்பெறும்?

புஷ்பம், மாஸம், மஹான், பரீக்ஷை, விஜயம், ஹிந்தி, ஷண்முகம், லக்ஷ்மி.

3. திருத்தமாக எழுதுக:

போரும், சிலவு, முளக்கீரை, முழுங்கு, புஞ்சை, அரணாக்கயறு, ஒண்டியாய், அருவாள்.

4. பின்வருவனவற்றிலிருந்து போலி, மரூஉ, மங்கலம் குழூஉக்குறி இவற்றுக்கான உதாரணங்களை எடுத்தெழுதுக:

சோணாடு, வாய்க்கால், நன்காடு, சொல்விளம்பி, ஆகாயப்பால், துஞ்சினார், அருமந்த பிள்ளை, சதை.

### வினாக்கள்

1. வடசொல் என்பது யாது? அச்சொற்களை எவ்வாறு எளிதில் அறியலாம்?

2. திசைச் சொல் என்பது யாது? உதாரணங்களால் விளக்குக.

3. மரூஉச் சொற்கள் என்பன யாவை? உதாரணங்கள் தருக.

4. [illegible] வழக்கு எவ்விதம் மூவகைப்படும்? ஒவ்வொரு வகையையும் இரண்டிரண்டு உதாரணங்களால் விளக்குக.

5. இடக்கரடக்கல், மங்கலம், குழூஉக்குறி-வகைக்கு [illegible] உதாரணங்கள் தருக.

# IV. சொல்

**பெயர்ச்சொல், வினைச்சொல் :**

(உ-ம்) வேலன் வந்தான்.
வள்ளி பாடுகிறாள்.
மழை பெய்யும்.

இந்த வாக்கியங்களில் வேலன், வள்ளி, மழை என்பன பொருள்களின் பெயர்கள். இவை பெயர்ச் சொற்கள். ஆனால் வந்தான், பாடுகிறாள், பெய்யும் என்பன தொழிலை உணர்த்தி நிற்கின்றன. இவ்வாறு தொழிலைக் குறித்து நிற்கும் சொல் வினைச் சொல் எனப்படும். ஒரு பொருளின் பெயரைக் குறித்து நிற்கும் சொல் பெயர்ச்சொல் ஆகும்.

ஒரு பொருளின் தொழிலைக் குறித்து நிற்கும் சொல் வினைச் சொல் ஆகும். (வினை-தொழில்)

**அறுவகைப் பெயர்கள் :** (உ-ம்.) பொன், மதுரை, நாள், கை, வெண்மை, வருதல்.

இவற்றுள் பொன் என்ற பெயர் ஒரு பொருளையும், மதுரை என்பது ஓர் இடத்தின் பெயரையும், நாள் என்பது ஒரு காலத்தின் பெயரையும், கை என்பது ஓர் உறுப்பின் (சினையின்) பெயரையும், வெண்மை என்பது ஒரு நிறத்தின் (குணத்தின்) பெயரையும், வருதல் என்பது ஒரு தொழிலின் பெயரையும் குறித்து நிற்கின்றன. ஆதலால், பெயர்ச் சொற்கள் பொருட் பெயர், இடப் பெயர், காலப் பெயர், சினைப் பெயர், பண்புப் பெயர், தொழிற் பெயர் என ஆறு வகைப்படும் என்பதை உணர்க.

ஒரு பொருளைக் குறித்து நிற்கும் பெயர் பொருட் பெயர் ஆகும். (உ-ம்) பொன், மணி, மனிதன், கோபாலன், மரம்.

ஓர் இடத்தைக் குறித்து நிற்கும் பெயர் இடப் பெயர் ஆகும். (உ-ம்) சென்னை, மதுரை, சிதம்பரம், பள்ளிக்கூடம்.

ஒரு காலத்தைக் குறித்து நிற்கும் பெயர் காலப் பெயர் ஆகும். (உ-ம்) நாள், காலை, மாலை, சனி, ஆவணி, கர.

ஒரு சினை அல்லது உறுப்பைக் குறித்து நிற்கும் பெயர் சினைப் பெயர் ஆகும். (உ-ம்) கை, கால், விரல், இலை, பூ, கொம்பு, வேர்.

ஒரு பண்பைக் (குணம்) குறித்து நிற்கும் பெயர் பண்புப் பெயர் அல்லது குணப் பெயர் ஆகும்.

(உ-ம்) நன்மை, தீமை, வன்மை, செம்மை, கருமை, குளிர்ச்சி.

ஒரு தொழிலைக் குறித்து வரும் பெயர் தொழிற் பெயர். (உ-ம்) செய்தல், நடத்தல், வருதல், வரவு, செலவு, ஓட்டம்.

இவ் அறுவகைப் பெயர்களையன்றி எண் பெயரென்னும் ஒருவகையும் உண்டு.

எண் பெயர்: ஒன்று, இரண்டு, மூன்று போன்ற சொற்கள் எண்ணுப் பெயர் எனப்படும். தமிழில் வரும் இலக்கத்தைக் குறிக்கும் பெயர்கள் எண்ணுப் பெயர்கள் ஆகும்.

(உ-ம்) ஒன்று, பத்து, நூறு, ஆயிரம்.

இந்த எண்ணுப் பெயர்கள் முதலாவது, இரண்டாவது என்று வரின் பெயருக்கு அடைமொழியாக வரும்.

(உ-ம்) முதலாவது கடை, இரண்டாவது கடை. நான்காவது வகுப்பு, ஐந்தாவது வகுப்பு.

## பெயர் அடை : வினை அடை

**அடைமொழி :**

(உ-ம்) நல்ல பையன் மெல்ல வந்தான்.

இங்கு நல்ல என்னும் சொல் பையன் என்னும் பெயர்ச் சொல்லை அடுத்து அடைமொழியாக நின்றமை காண்க

இவ்வாறே மெல்ல என்னும் சொல் நடந்தான் என்னும் வினைச்சொல்லை அடுத்து அடைமொழியாக நிற்பதைக் காண்க.

ஒரு பெயர்ச்சொல்லை அல்லது வினைச் சொல்லை அடுத்து வரும் சொல்லுக்கு அடைமொழி என்பது பெயர். அடைமொழியை அடையெனச் சொல்வதும் உண்டு.

பெயர்ச் சொல்லை அடுத்து வரும் அடைமொழி பெயர் அடை எனப்படும்; வினைச்சொல்லை அடுத்து வரும் அடைமொழி வினை அடை எனப்படும்.

**சொற்களின் பொருளும் பொருள் மாறும் முறையும் :**

(உ-ம்) கந்தன் பார்த்தான்.
கந்தனைப் பார்த்தான்

இந்த உதாரணங்களைக் கவனியுங்கள். முதல் உதாரணத்தில், பார்த்தவன் கந்தன் என்பது புலப்படுகிறது. இரண்டாவது உதாரணத்தில் கந்தனை மற்றொருவன் பார்த்தான் என்பது தெரியவருகிறது.

கந்தன் என்னும் சொல் யாதொரு மாறுதலுமின்றி உள்ளபோது ஒரு பொருளும், கந்தன் + ஐ = கந்தனை என்று ஓர் உருப்பை ஏற்றபோது பொருள் மாறுதலும் ஏற்படுகின்றன அல்லவா ?

(உ-ம்) முருகன் கொடுத்தான்.
முருகனுக்குக் கொடுத்தான்.

இவ்வாறு ஐ, ஆல், கு, இன், உடைய, இடம் போன்ற உருபுகளை ஏற்கும்போது பொருள் மாறுவதை அறியுங்கள்.

(உ-ம்) முருகனைக் கண்டான்.
முருகனால் கொடுக்கப்பட்டது.
முருகனுக்குக் கிடைத்தது.
முருகனின் நலலவன் இராமன்.
முருகனுடைய நூல்.
முருகனிடம் கொடு.

ஒரு பொருள் பல சொற்களும் பொருளில் நுட்பமாய் வேறுபடுதல் :

1. (உ-ம்) ஈ, தா, கொடு.

ஈ என்றாலும், தா என்றாலும், கொடு என்றாலும் கொடு என்னும் பொருளையே உணர்த்தும். ஆகலால் ஈ, தா, கொடு என்பன ஒரு பொருள் பல சொற்கள் எனப்படும். ஆனால் ஈ, தா, கொடு இவை ஒவ்வொன்றின் பொருளிலும் நுட்பமான வேறுபாடு உண்டு.

1. ஐயா, காலணா ஈக.
2. நண்பா, ஐந்து ரூபாய் இருந்தால் தா.
3. ஆசிரியர் மாணவனை நோக்கி, "உன் புத்தகத்தைக் கொடு" என்றார்.

ஒரு பொருளை வேண்டுவோன் தன்னின் உயர்ந்தோரிடம் கேட்கும்பொழுது ஈ என்றும், தனக்குச் சமமானவனிடம் கேட்கும்பொழுது தா என்றும், தன்னினும் தாழ்ந்தவனிடம் கேட்கும் போது கொடு என்றும் கூறுவதே முறை. இவ்வாறு இச் சொற்கள் பொருளில் நுட்பமாக வேறு படுவதை அறிக.

2. (உ-ம்) அரும்பு, முகை, போது, மலர்.

இச்சொற்கள் பொதுவாகப் பூவை உணர்த்தும். ஆகையால், இவை ஒரு பொருள் குறித்த பல சொற்களாம், ஆனால் மலராத பூவை அரும்பு என்றும், முகிழ்த்த பூவை முகை என்றும், மலரும பருவத்துப் பூவைப் போது என்றும், மலர்ந்த பூவை மலர் என்றும் உரைப்பதே முறையாகும்.

இவ்வாறே பாடபுத்தகங்களில் வரும் ஒரு பொருள் குறித்த பல சொற்கள் ஒவ்வொன்றும் நுட்பமாக வேறுபடுதலைக் கேட்டறிந்து குறித்துக் கொள்ளவும்.

### பயிற்சி

1. பின்வரும் பெயர்ச்சொற்களை வகைப்படுத்தி எழுதுக:

பலகை, நாற்காலி, மயிலாப்பூர், வருகை, வறுமை, திங்கட்கிழமை, சீர்காழி, பகல், கை, தோள், செய்தல், இறக்குமதி, ஓட்டம், திருப்போரூர், இரவு, அருமை.

| பொருட் பெயர் | இடப் பெயர் | காலப் பெயர் | சினைப் பெயர் | பண்புப் பெயர் | தொழிற் பெயர் |
|---|---|---|---|---|---|
| | | | | | |

2. கீழ்வரும் வாக்கியங்களிலுள்ள சொற்களை இக் கட்டங்களில் அமைத்தெழுதுக:

| பெயர்ச்சொல் | பெயர் அடை | வினைச்சொல் | வினை அடை |
|---|---|---|---|
| | | | |

1. ஆண் மயில் அழகாய் ஆடும்.
2. கிழவன் தள்ளாடி நடக்கிறான்.
3. காவிரி நீர் கலங்கலாக இருக்கிறது.
4. மந்தமான ஆமை, சுறுசுறுப்புள்ள முயலை வென்றது.
5. அந்தச் சிறுமி இனிமையாகப் பாடுகிறாள்.

3. கீழுள்ள உதாரணங்களில் சொற்கள் பொருள் மாறுபட்டுள்ள முறையை விளக்கி எழுதுக:

(i) இராமன் புத்தகம் எடுத்தான்.
இராமன் புத்தகம் காணாமற் போயிற்று.

(ii) வீடு சென்றான்.
வீடு இடிந்தது.

### வினாக்கள்

1. பெயர்ச்சொல்லாவது யாது? வினைச்சொல்லாவது யாது?

2. பெயர்ச்சொல் எத்தனை வகைப்படும்? அவை யாவை? வகைக்கு இரண்டு உதாரணங்கள் தருக.

3. எண்ணுப்பெயர் என்பது யாது? அது பெயர்ச்சொல்லுக்கு எவ்வாறு அடைமொழியாக வரும்?

4. பெயரடை, வினையடை—உதாரணங்களால் விளக்குக.

5. ஈ, தா, கொடு,—இவை ஒவ்வொன்றும் பொருளில் எவ்வாறு நுட்பமாக வேறுபடும்? உதாரணத்துடன் விளக்குக.

# V. புணர்ச்சி

(உ-ம்.) பொன் + மணி = பொன்மணி
பலா + காய் = பலாக்காய்

இந்த உதாரணங்களில் இரண்டு சொற்களைச் சேர்த்து எழுதுகிறோம். இவ்வாறு சொற்கள் ஒன்றுபடச் சேருவதே புணர்ச்சி எனப்படும்.

பொன் + மணி — இவைகளில் பொன் என்னும் சொல் நிலைமொழி என்றும், அதனுடன் சேர வரும் மணி என்னும் சொல் வருமொழி என்றும் சொல்லப் படும்.

பொன் என்ற நிலைமொழியில் ஈற்றெழுத்து ன்; மணி என்ற வருமொழியில் முதலெழுத்து(ம என்னும் எழுத்திலுள்ள) ம.

பொன் மணி என்பதில் நிலைமொழியின் ஈற்றெழுத்தும் வருமொழியின் முதலெழுத்தும் மாறுதலடையாமல் (விகாரப்படாமல்) இயல்பாகவே நிற்கச் சேருவது இயல்பு புணர்ச்சி ஆகும்.

(உ-ம்.) முருகன் + கை = முருகன் கை
கந்தன் + வந்தான் = கந்தன் வந்தான்

பலா + காய் = பலாக்காய் இந்த உதாரணத்தில் க் என்ற ஓர் எழுத்து இடையில் தோன்றி, நிலைமொழியும் வருமொழியும் விகாரப்பட்டுச் சேர்ந்து நிற்கின்றன.

சொற்கள் ஒன்றோடொன்று சேரும்பொழுது நிலைமொழி ஈற்றிலும், வருமொழி முதலிலுமுள்ள எழுத்துக்கள் விகாரப்பட்டுச் சேருதல் விகாரப் புணர்ச்சி ஆகும். (விகாரம் = வேறுபாடு)

(உ-ம்.) வாழை + பழம் = வாழைப்பழம்
தமிழ் + பையன் = தமிழ்ப் பையன்

விகாரப் புணர்ச்சி தோன்றல் விகாரம், திரிதல் விகாரம், கெடுதல் விகாரம் என மூவகைப்படும்.

**தோன்றல் விகாரம் :**

(உ-ம்.) அவரை + கொடி = அவரைக்கொடி
பலா + சுளை = பலாச்சுளை
புலி + தோல் = புலித்தோல்

இவற்றுள் க், ச், த் என்ற எழுத்துக்கள் தோன்றியிருத்தலால் தோன்றல் விகாரம்.

நிலைமொழி வருமொழிகளுக்கு இடையில் ஓர் எழுத்துத் தோன்றுவது தோன்றல் விகாரம ஆகும்.

**திரிதல் விகாரம் :**

(உ-ம்.) மண் + பானை = மட்பானை — நிலைமொழி ஈறு (ண், ட் ஆகத்) திரிந்தது.
மீன் + தலை = மீன்றலை — வருமொழி முதல் (த, ற ஆகத்) திரிந்தது.
அல் + திணை = அஃறிணை — நிலைமொழி ஈறும், வருமொழி முதலும் (ல், ஃ ஆகவும், தி, றி ஆகவும்) திரிந்தன.

இரு சொற்கள் இணையும்போது எழுத்துக்கள் திரிந்து வரின் அது திரிதல் விகாரமாம்.

**கெடுதல் விகாரம் :**

(உ-ம்.) மரம் + வேர் = மரவேர்
வட்டம் + வடிவம் = வட்ட வடிவம்
— நிலைமொழி ஈறு கெட்டது.

நிலைமொழி ஈற்றிலுள்ள எழுத்துக்கள் கெடுவது கெடுதல் விகாரம் ஆகும்

**வலி மிகும் இடங்கள் :**

1. இரு சொற்கள் இணையும்போது நிலைமொழி யீற்றில் உயிரெழுத்துக்கள் இருந்து, வருமொழி முதலில் க, ச, த, ப என்ற வல்லின மெய் வந்தால் பெரும்பாலும் வந்த வல்லினம் மிகும்.

(உ-ம்.) ஆட + போனன் = ஆடப்போனன்
தேடி + கொண்டுவா = தேடிக்கொண்டுவா
தீ + பெட்டி = தீப்பெட்டி
பூ + குடல் = பூக்குடல்

2. அந்த, இந்த, எந்த என்னும் சொற்களின் முன்னும், அப்படி, இப்படி, எப்படி என்னும் சொற்களின் முன்னும் வரும் க, ச, த, ப என்ற வல்லினம் மிகுந்து நிற்கும்.

(உ-ம்.) 1. அந்த + பையன் = அந்தப் பையன்
இந்த + தட்டு = இந்தத் தட்டு
எந்த + சக்கரம் = எந்தச் சக்கரம்

2. அப்படி + கூறினன் = அப்படிக் கூறினன்
இப்படி + செய்தான் = இப்படிச் செய்தான்
எப்படி + பாடினர் = எப்படிப் பாடினர்

குறிப்பு :— படி என்ற சொல் சுட்டுவினைக்களை அடுத்து வரும்போது தான் வல்லினம் மிகும். வரும்படி கூறினன், செய்யும்படி சொன்னன் என இவ்வாறு வரும்பொழுது வல்லினம் மிகாது.

3. அ, இ, எ என்னும் தனி எழுத்துடன் வல்லினம் வருமொழியாக வந்தால் வல்லினம் மிகும்.

(உ-ம்.) அ + பலகை = அப் பலகை
இ + தடம் = இத் தடம்
எ + பாதை = எப் பாதை

4. அங்கு, இங்கு, எங்கு என்னும் சொல்லுக்கு முன் வல்லினம் மிகும்.

(உ-ம்.) அங்கு + சென்றேன் = அங்குச் சென்றேன்
இங்கு + போனேன் = இங்குப் போனேன்
எங்கு + தந்தாய் = எங்குத் தந்தாய்

### பயிற்சி

1. கீழேயுள்ள தொடர்களுள்

(அ) நிலைமொழி வருமொழிகளைக் குறிப்பிடுக.

(ஆ) நிலைமொழி யீற்றெழுத்தையும் வருமொழி முதலெழுத்தையும் எடுத்தெழுதுக :

நல்லதம்பி, காடு சென்றான், பாடம் படித்தான், மாம்பழம்.

2. அறஞ்செய விரும்பு, எண்ணெழுத்து, குலப் பெருமை, கற்றாண், பற்பலர், சொற்சுவை, அரசமரம், வேழமுகம், கோலஞ்செய், துங்கக் கரிமுகம், நீ யெனக்கு, அங்குத் தமிழ் மூன்றுந் தா,—இவற்றுள் தோன்றல், திரிதல், கெடுதல் விகாரத்தின்படி புணர்ந்துள்ள தொடர்களை எடுத்துக்காட்டி, நன்கு விளக்குக.

3. பின்வருவனவற்றைப் பிரித்தெழுதுக: எப்பெட்டி, மர வேர், எப்படிக் குத்தினான், அந்தத் தெரு, மட்பானை, தீப்பெட்டி, அங்குச் சென்றான், அப்பலகை, மீன்றலை, பலாச் சுளை.

4. கீழ்வருவனவற்றைச் சேர்த்தெழுதுக:

அ + நண்டு, இ + கன்று, எப்படி + செய்தான், இந்த + பையன், பொன் + தகடு, தமிழ் + பையன், அல் + திணை, எந்த + சக்கரம், எங்கு + போனான், பூ + குடல், ஆண் + யானை.

வினாக்கள்

1. புணர்ச்சி என்றால் என்ன?

2. இயல்பு புணர்ச்சி, விகாரப் புணர்ச்சி,—விளக்குக.

3. விகாரப் புணர்ச்சி எத்தனை வகைப்படும்? அவை எவை?

4. க, ச, த, ப என்ற வல்லின மெய் எவ்விடங்களில் மிகும்? உதாரணங்களுடன் விளக்குக.

# VI. நிறுத்தற் குறிகள்

உலகம் போற்றும் உத்தமர் காந்தியடிகளை அறியாதவரும் உண்டோ? அவர் உலகத்தின் ஜோதி; இந்தியாவின் தந்தை; ஏழைகளின் தோழர். இப் பெரியார் **பட்டேல்,** [illegible], இராஜாஜி முதலான அரிய தலைவர்களின் துணைகொண்டு வெள்ளையரை வெளியேற்றி, நம் தாய்நாடு பூரண சுதந்திரம் அடையச் செய்தார். என்னே! இவர்தம் ஆற்றல்!

மேற்கண்ட பல வாக்கியங்களை நாம் படிக்கும் போது ஒரே வேகமாகப் படித்துக்கொண்டு போனால் பொருள் விளங்காது. நமக்கும், கேட்போருக்கும் பொருள் விளங்கும்படி எந்தெந்த இடங்களில், எவ்வளவு நேரம் நிறுத்திப் படிக்கவேண்டுமென்றும், எவ்வித உணர்ச்சியுடன் படிக்கவேண்டுமென்றும் அறிதற்குச் சில குறிகளை உபயோகிக்கிறோம். அவைகளே நிறுத்தற் குறிகள் எனப் பெயர்பெறும். நிறுத்திப் படிக்கவேண்டிய காலத்தைக் குறிப்பதே நிறுத்தற் குறியாம்.

மேலே முதற் பத்தியிலுள்ள வாக்கியங்களில் . , ; ? ! இக் குறிகள் இடப்பட்டிருப்பதைக் கவனியுங்கள்.

(.) இது முற்றுப்புள்ளி ஆகும். இதனை வாக்கியத்தின் முடிவில் அமைத்தல் வேண்டும். இப் புள்ளியுள்ள இடத்தில் [illegible] நான்கு மாத்திரை நேரம் நிறுத்தல் வேண்டும்.

(உ-ம்) கோவலன் மதுரையை அடைந்தான்.
நான் கோவிலுக்குச் சென்றேன்.

குறிப்பு: ஒரு முறை இயல்பாகக் கண் இமைக்கும் நேரம் அல்லது கைந்நொடிக்கும் நேரம் மாத்திரை என்னும் கால அள வாகும்.

; இஃது அரைப்புள்ளி ஆகும். இதனை ஒரே பொருளைப்பற்றி வாக்கியங்கள் அடுக்கி வரும் பொழுது அமைத்தல்வேண்டும். இப் புள்ளியுள்ள இடத்தில் இரண்டு மாத்திரை நேரம் நிறுத்தல் வேண்டும்.

(உ-ம்) 1. ஆசிரியர் வகுப்புக்கு வந்தார்; தம் பீடத்தில் அமர்ந்தார்; புத்தகத்தைக் கையில் எடுத்தார்; பாடம் சொல்லத் தொடங்கினர்.

2. காந்திமதி தோட்டத்திற்குச் சென் றாள்; பூக்களைப் பறித்தாள்; அவை களைத் தொடுத்தாள்; தலையில் அணிந்துகொண்டாள்.

, இது காற்புள்ளி எனப்படும். இதனை ஒரே வாக்கியத்தில் பல பொருள்களைப் பிரித்துக் காட்டும் இடத்தில் அமைத்தல்வேண்டும். இப்புள்ளியுள்ள இடத்தில் ஒரு மாத்திரை நேரம் நிறுத்தவேண்டும்.

(உ-ம்) 1. காட்டில் யானை, சிங்கம், புலி, மான் முதலிய மிருகங்கள் உண்டு.

இந்த வாக்கியத்தில் பல பெயர்ச்சொற்கள் தொடர்ந்து நிற்கும்பொழுது ஒவ்வொன்றுக்கும் இடையில் காற்புள்ளி இட்டிருப்பதை அறிக.

(உ-ம்.) 2. தேவதை சொல்வதைக் கேட்டு, அதைப்பற்றி நினைந்து, பின்பு மைதாஸ் மகிழ்ச்சி அடைந்தான்.

ஒரே வாக்கியத்தில் பல வினைச் சொற்கள் தொடர்ந்து வரும்போதும் காற்புள்ளி இடவேண்டும்.

(உ-ம்.) 3. ஆகையால் அவன் வருந்தினான். ஆனால், அது சரியன்று.

ஆகையால், ஏனெனில், என்றாலும், ஆனால் முதலிய சொற்களுக்குப் பிறகும் காற்புள்ளி போடுவதுண்டு.

? இது வினாக் குறி. வினா வாக்கியங்களின் முடிவில் முற்றுப்புள்ளிக்குப் பதிலாக வினாக் குறி அமைக்கவேண்டும். இக்குறியுள்ள இடத்தில் நான்கு மாத்திரை நேரம் நிறுத்தவேண்டும்.

(உ-ம்) கந்தா, பாடம் படித்தாயா?
நீ ஏன் நேற்று வரவில்லை?
உன் சொந்த ஊர் எது?

! இஃது உணர்ச்சிக் குறி ஆகும். இதனை வியப்பு, அச்சம், இரக்கம், மகிழ்ச்சி முதலிய உணர்ச்சிகளைத் தெரிவிக்கும் இடங்களில் அமைக்கவேண்டும். இக் குறியுள்ள இடத்தில நான்கு மாத்திரை நேரம் நிறுத்தவேண்டும்.

(உ-ம்) ஆ! அதோ தெரியும் வானவில் என்ன அழகு! (வியப்பு)
ஐயோ! புலி வருகிறதே! புலி வருகிறதே! (அச்சம்)
அந்தோ பாவம்! சிறுவன் நாயைக் கல்லால் அடிக்கிறானே! (இரக்கம்)
ஆகா! நான் ஓட்டப் பந்தயத்தில் வென்றுவிட்டேன்! (மகிழ்ச்சி)

## பயிற்சி

பின்வரும் வாக்கியங்களில் பொருத்தமான நிறுத்தற் குறிகளை அமைத்து எழுதுக :

1. காந்தியடிகள் தென்னாப்பிரிக்கா சென்றார் அங்குள்ள இந்தியர்களுக்காக உழைத்தார் தடியடி பட்டார் சிறைக்குச் சென்றார் இறுதியில் வெற்றிபெற்றார்

2. சங்கரன் கடைக்குச் சென்று பருப்பு வெல்லம் புளி உப்பு சர்க்கரை முதலியன வாங்கிவந்தான்

3. ஆ இந்த மலர்களின் அழகே அழகு நான் அவற்றைப் பறிக்க அருகில் சென்றபொழுது என் மனம் பறிக்கத் துணியவில்லை ஏன் துணியவில்லை தெரியுமா

4. நரி திராட்சைக் குலையைக் கண்டது குதித்துப் பார்த்தது ஒன்றும் பலிக்கவில்லை

5. இராமன் நல்ல பையன் ஆனால் சுறுசுறுப்பு இல்லாதவன்

### வினாக்கள்

1. நிறுத்தற் குறிகளை ஏன் இடவேண்டும் ?

2. ஒரு மாத்திரை நேரம் எவ்வளவு ஆகும் ?

3. காற்புள்ளி, அரைப்புள்ளி இவை வரும் இடங்களில் முறையே எவ்வளவு மாத்திரை நேரம் நிறுத்த வேண்டும் ?

4. வினாக்குறி, உணர்ச்சிக் குறி இவைகளை முறையே எவ்வெவ்விடங்களில் இடவேண்டும் ?

5. உணர்ச்சிக் குறிகளில் எத்தனை வகையுண்டு? உதாரணங்களால் விளக்குக.

# இரண்டாம் படிவம்

## I. எழுத்துக்கள்

எழுத்துக்களின் ஒலி வேறுபாடுகளைக் கொண்டு தமிழ் எழுத்துக்களை உயிரெழுத்து, மெய்யெழுத்து, உயிர்மெய்யெழுத்து, ஆய்த எழுத்து என நான்கு வகைகளாகப் பிரிக்கலாமென்று முதற் படிவப் பகுதியில் படித்திருக்கிறீர்கள். இவ்வெழுத்துக்களை மேலும் எவ்வகைகளில் பிரிக்கலாமென்று இங்கு ஆராய்வோம்.

**உயிரெழுத்தின் வகை**

குறில் : நெடில் :

| | |
|---|---|
| அரசு | ஆல் |
| இலை | ஈசல் |
| உரல் | ஊதல் |

இவற்றுள் அ, இ, உ இவற்றைக் காட்டிலும் ஆ, ஈ, ஊ நீண்டு ஒலிக்கின்றன அல்லவா ?

உயிரெழுத்துக்கள் உச்சரிக்கப்படும்பொழுது குறுகி ஒலிப்பன குறில் என்றும், நீண்டு ஒலிப்பன நெடில் என்றும் பெயர்பெறுவதைப்பற்றி முந்திய வகுப்பிலேயே அறிந்திருக்கிறோம். குறில் குற்றெழுத்து என்றும், நெடில் நெட்டெழுத்து என்றும் வழங்கப்பெறும்.

அ, இ, உ, எ, ஒ என்ற ஐந்து எழுத்துக்களும் குற்றெழுத்துக்கள் ஆகும்.

ஆ, ஈ, ஊ, ஏ, ஐ, ஓ, ஔ என்ற ஏழு எழுத்துக்களும் நெட்டெழுத்துக்கள் ஆகும்.

மேலும், உயிரெழுத்துப் பன்னிரண்டனுள் சில சுட்டெழுத்துக்கள் எனவும், சில வினாவெழுத்துக்கள் எனவும் பெயர்பெறும்.

சுட்டெழுத்துக்கள் : அ, இ, உ என்ற மூன்று எழுத்துக்களும் ஒரு பொருளைச் சுட்டிக் காட்ட வரும்பொழுது சுட்டெழுத்துக்கள் ஆகும். [சுட்டு - பொருளைக் குறித்துக் காட்டல்]

(உ-ம்.) அவன் இவன் உவன்
அவ்வீடு இவ்வீடு உவ்வீடு

குறிப்பு : 1. அகரச் சுட்டு தூரத்திலுள்ள பொருளையும், இகரச் சுட்டு அருகிலுள்ள பொருளையும், உகரச் சுட்டு மேல் கீழ் நடுவாகிய இடத்திலுள்ள பொருளையும் சுட்டிக் காட்டும். உகரச் சுட்டு செய்யுளில் மட்டுமே வரும்.

2. அரம, இலை, உரல் என்றவற்றுள் அ, இ, உ என்ற எழுத்துக்கள் சுட்டுப்பொருளில் வரவில்லை. ஆதலால், அவை சுட்டெழுத்துக்கள் ஆகா

வினாவெழுத்துக்கள் : ஆ, எ, ஏ, ஓ என்ற நான்கு எழுத்துக்களும் வினாப் பொருளில் வரும்பொழுது வினாவெழுத்துக்கள் ஆகும். (வினா - கேள்வி)

(உ-ம்.)

| | |
|---|---|
| கந்தன் வந்தானா? | (ஆ வினாவெழுத்து) |
| எவன் வந்தான்? | (எ ,, ) |
| ஏன் வந்தாய்? | (ஏ ,, ) |
| முருகனே வெட்டினான்? | (ஏ ,, ) |
| கந்தனோ பாடினான்? | (ஓ ,, ) |

யா என்ற உயிர்மெய்யெழுத்தும் வினாப் பொருளில் வரும்.

(உ-ம்.) இவர் யாவர்?—(யா வினாவெழுத்து)

எ, யா இரண்டும் சொல்லுக்கு முதலிலும், ஆ, ஓ இரண்டும் சொல்லுக்குக் கடைசியிலும், ஏ சொல்லுக்கு முதலிலும், கடைசியிலும் நின்று வினாப்பொருள் தருவதை அறிக.

### பயிற்சி

பின் வருவனவற்றுள் காணும் உயிரெழுத்துக்களைக் குறில், நெடில், சுட்டு, வினா எழுத்துக்களாகக் கீழுள்ள கட்டங்களில் அமைத்து எழுதுக:—அம்மரம்; எங்குள்ளது? ஏன் அடித்தாய்? இம்மாகாணம்; ஈயம்; அந்த; கண்ணனோ ஓட்டத்தில் வென்றவன்? யாது கூறினார்? ஏணி; யானை; யார்? இப் புத்தகம்; முருகனா செய்தான்? எத்தனை?

| குறில் | நெடில் | சுட்டு | வினா |
|---|---|---|---|
| | | | |

### மெய்யெழுத்தின் வகை

உயிரெழுத்துக்கள் ஒலி காரணமாகக் குறில், நெடில் என வேறுபட்டனபோலவே, மெய்யெழுத்துக்களும் ஒலி காரணமாகச் சில பிரிவுகளைப் பெறும்.

பாக்கு பங்கு பாய்

இவற்றுள் க் வன்மையாகவும், ங் மென்மையாகவும், ய் இடைத்தரமாகவும் ஒலிக்கின்றன.

வன்மையாக ஒலிக்கும் மெய்யெழுத்துக்கள் வல்லினம் என்றும், மென்மையாக ஒலிக்கும் மெய்யெழுத்துக்கள் மெல்லினம் என்றும், இடைத்தரமாக ஒலிக்கும் மெய்யெழுத்துக்கள் இடையினம் என்றும் பெயர்பெறும்.

இவ்வாறு மெய்யெழுத்துக்கள் மூவகைப் படுவதை அறிக.

குறிப்பு: வல்லினத்தை வல்லெழுத்து, வன்கணம், வலி என்றும், மெல்லினத்தை மெல்லெழுத்து, மென்கணம், மெலி என்றும், இடையினத்தை இடையெழுத்து, இடைக்கணம், இடை என்றும் கூறுவர்.

வல்லெழுத்து: வலிய ஓசையுடன் ஒலிக்கும் க், ச், ட், த், ப், ற் என்ற ஆறு எழுத்துக்களும் வல்லெழுத்துக்கள் ஆகும்.

(உ-ம்.) பக்கம் கட்டம் அப்பம்
அச்சம் சத்தம் முற்றம்

மெல்லெழுத்து: மெலலிய ஓசையுடன் ஒலிக்கும் ங், ஞ், ண், ந், ம், ன் என்ற ஆறு எழுத்துக்களும் மெல்லெழுத்துககள் ஆகும்.

(உ-ம்.) தங்கம் பண்டம கம்பம்
பஞ்சம் தந்தம் மன்றம்

இடையெழுத்து: இடைப்பட்ட ஓசையுடன் ஒலிக்கும ய், ர், ல், வ், ழ், ள் என்ற ஆறு எழுத்துக்களும் இடையெழுத்துக்கள் ஆகும்.

(உ-ம்.) மெய்யனை தோல்வி வாழ்வு
பார்வை செவ்வை கேள்வி

பயிற்சி

பின்வரும் சொற்களிலுள்ள மெய்யெழுத்துக்களை வல்லினம், மெல்லினம், இடையினம் என வகைப்படுத்தி எழுதுக:

| | | |
|---|---|---|
| பயிற்சி | பைந்தமிழ் | செய்யப்பட்டது |
| புத்தகம் | கட்டங்கள் | ஊர்வலம் |
| பண்டம் | பக்கம் | பள்ளிக்கூடம் |
| தேங்காய் | ஊஞ்சல் | வெற்றி |
| எழுத்து | பந்தயம் | தோல்வி |

உயிர்மெய்யெழுத்தின் வகை

உயிரெழுத்தின் வகையினையும் மெய்யெழுத்தின் வகையினையுங்கொண்டு உயிர்மெய்யெழுத்துக்களை ஐந்து பிரிவாகப் பிரிக்கலாம்.

அவை உயிர்மெய்க் குற்றெழுத்து, உயிர்மெய் நெட்டெழுத்து, உயிர்மெய் வல்லெழுத்து, உயிர்மெய் மெல்லெழுத்து, உயிர்மெய் இடையெழுத்து என்பனவாம்.

உயிர்மெய்க் குற்றெழுத்துக்கள் 18 × 5 = 90

| + | அ | இ | உ | எ | ஒ |
|---|---|---|---|---|---|
| க் | க | கி | கு | கெ | கொ |
| ங் | ங | ஙி | ஙு | ஙெ | ஙொ |
| ச் | ச | சி | சு | செ | சொ |
| ஞ் | ஞ | ஞி | ஞு | ஞெ | ஞொ |
| ட் | ட | டி | டு | டெ | டொ |
| ண் | ண | ணி | ணு | ணெ | ணொ |
| த் | த | தி | து | தெ | தொ |
| ந் | ந | நி | நு | நெ | நொ |
| ப் | ப | பி | பு | பெ | பொ |
| ம் | ம | மி | மு | மெ | மொ |
| ய் | ய | யி | யு | யெ | யொ |
| ர் | ர | ரி | ரு | ரெ | ரொ |
| ல் | ல | லி | லு | லெ | லொ |
| வ் | வ | வி | வு | வெ | வொ |
| ழ் | ழ | ழி | ழு | ழெ | ழொ |
| ள் | ள | ளி | ளு | ளெ | ளொ |
| ற் | ற | றி | று | றெ | றொ |
| ன் | ன | னி | னு | னெ | னொ |

உயிர்மெய் நெட்டெழுத்துக்கள் 18 × 7 = 126

| + | ஆ | ஈ | ஊ | ஏ | ஐ | ஓ | ஔ |
|---|---|---|---|---|---|---|---|
| க் | கா | கீ | கூ | கே | கை | கோ | கௌ |
| ங் | ஙா | ஙீ | ஙூ | ஙே | ஙை | ஙோ | ஙௌ |
| ச் | சா | சீ | சூ | சே | சை | சோ | சௌ |
| ஞ் | ஞா | ஞீ | ஞூ | ஞே | ஞை | ஞோ | ஞௌ |
| ட் | டா | டீ | டூ | டே | டை | டோ | டௌ |
| ண் | ணா | ணீ | ணூ | ணே | ணை | ணோ | ணௌ |
| த் | தா | தீ | தூ | தே | தை | தோ | தௌ |
| ந் | நா | நீ | நூ | நே | நை | நோ | நௌ |
| ப் | பா | பீ | பூ | பே | பை | போ | பௌ |
| ம் | மா | மீ | மூ | மே | மை | மோ | மௌ |
| ய் | யா | யீ | யூ | யே | யை | யோ | யௌ |
| ர் | ரா | ரீ | ரூ | ரே | ரை | ரோ | ரௌ |
| ல் | லா | லீ | லூ | லே | லை | லோ | லௌ |
| வ் | வா | வீ | வூ | வே | வை | வோ | வௌ |
| ழ் | ழா | ழீ | ழூ | ழே | ழை | ழோ | ழௌ |
| ள் | ளா | ளீ | ளூ | ளே | ளை | ளோ | ளௌ |
| ற் | றா | றீ | றூ | றே | றை | றோ | றௌ |
| ன் | னா | னீ | னூ | னே | னை | னோ | னௌ |

உயிர்மெய்க் குற்றெழுத்து: பதினெட்டு மெய் யெழுத்துடன் அ, இ, உ, எ, ஒ என்ற ஐந்து குற்றெழுத்துகளும் தனித்தனியே சேர்ந்தால் உண்டாகும் எழுத்துக்கள் உயிர்மெய்க் குற்றெழுத்துக்கள் எனப் பெயர்பெறும்.

அவை ($18 \times 5 = 90$) தொண்ணூறு எழுத்துக்கள் ஆகும். (பக்கம் 41 பார்க்க)

உயிர்மெய் நெட்டெழுத்து: பதினெட்டு மெய் களுடன் ஆ, ஈ, ஊ, ஏ, ஐ ஓ, ஔ என்ற ஏழு நெட்டெழுத்துக்களும் தனித்தனியே சேர்ந்தால் உண்டாகும் எழுத்துக்கள் உயிர்மெய் நெட்டெழுத் துக்கள் எனப் பெயர்பெறும்.

அவை ($18 \times 7 = 126$) நூற்றிருபத்தாறு எழுத்துக கள் ஆகும். (பக்கம் 41 பார்க்க)

உயிர்மெய் வல்லெழுத்து: க், ச், ட், த், ப், ற் என்ற ஆறு மெய்களுடன் பன்னிரண்டு உயிர்களும தனித்தனியே சேர்ந்தால் உண்டாகும் எழுத்துக்கள் உயிர்மெய் வல்லெழுத்துக்கள் எனப் பெயர்பெறும்.

| + | அ | ஆ | இ | ஈ | உ | ஊ | எ | ஏ | ஐ | ஒ | ஓ | ஔ |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| க் | க | கா | கி | கீ | கு | கூ | கெ | கே | கை | கொ | கோ | கௌ |
| ச் | ச | சா | சி | சீ | சு | சூ | செ | சே | சை | சொ | சோ | சௌ |
| ட் | ட | டா | டி | டீ | டு | டூ | டெ | டே | டை | டொ | டோ | டௌ |
| த் | த | தா | தி | தீ | து | தூ | தெ | தே | தை | தொ | தோ | தௌ |
| ப் | ப | பா | பி | பீ | பு | பூ | பெ | பே | பை | பொ | போ | பௌ |
| ற் | ற | றா | றி | றீ | று | றூ | றெ | றே | றை | றொ | றோ | றௌ |

உயிர்மெய் வல்லெழுத்து ($6 \times 12 = 72$) எழுபத்தி ரண்டு எழுத்துக்கள் ஆகும்.

உயிர்மெய் மெல்லெழுத்து: ங், ஞ், ண், ந், ம், ன் என்ற ஆறு மெய்களுடன் பன்னிரண்டு உயிர்களும் தனித்தனியே சேர்ந்தால் உண்டாகும் எழுத்துக்கள் உயிர்மெய் மெல்லெழுத்துக்கள் எனப் பெயர்பெறும்.

| | அ | ஆ | இ | ஈ | உ | ஊ | எ | ஏ | ஐ | ஒ | ஓ | ஔ |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| ங் | ங | ஙா | ஙி | ஙீ | ஙு | ஙூ | ஙெ | ஙே | ஙை | ஙொ | ஙோ | ஙௌ |
| ஞ் | ஞ | ஞா | ஞி | ஞீ | ஞு | ஞூ | ஞெ | ஞே | ஞை | ஞொ | ஞோ | ஞௌ |
| ண் | ண | ணா | ணி | ணீ | ணு | ணூ | ணெ | ணே | ணை | ணொ | ணோ | ணௌ |
| ந் | ந | நா | நி | நீ | நு | நூ | நெ | நே | நை | நொ | நோ | நௌ |
| ம் | ம | மா | மி | மீ | மு | மூ | மெ | மே | மை | மொ | மோ | மௌ |
| ன் | ன | னா | னி | னீ | னு | னூ | னெ | னே | னை | னொ | னோ | னௌ |

உயிர்மெய் மெல்லெழுத்துக்கள் (6 × 12 = 72) எழுபத்திரண்டு எழுத்துக்கள் ஆகும்.

உயிர்மெய் இடையெழுத்து: ய், ர், ல், வ், ழ், ள் என்ற ஆறு மெய்களுடன் பன்னிரண்டு உயிர்களும் தனித்தனியே சேர்ந்தால் உண்டாகும் எழுத்துக்கள் உயிர்மெய் இடையெழுத்துக்கள் எனப் பெயர்பெறும்.

| | அ | ஆ | இ | ஈ | உ | ஊ | எ | ஏ | ஐ | ஒ | ஓ | ஔ |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| ய் | ய | யா | யி | யீ | யு | யூ | யெ | யே | யை | யொ | யோ | யௌ |
| ர் | ர | ரா | ரி | ரீ | ரு | ரூ | ரெ | ரே | ரை | ரொ | ரோ | ரௌ |
| ல் | ல | லா | லி | லீ | லு | லூ | லெ | லே | லை | லொ | லோ | லௌ |
| வ் | வ | வா | வி | வீ | வு | வூ | வெ | வே | வை | வொ | வோ | வௌ |
| ழ் | ழ | ழா | ழி | ழீ | ழு | ழூ | ழெ | ழே | ழை | ழொ | ழோ | ழௌ |
| ள் | ள | ளா | ளி | ளீ | ளு | ளூ | ளெ | ளே | ளை | ளொ | ளோ | ளௌ |

உயிர்மெய் இடையெழுத்து (6 × 12 = 72) எழுபத்திரண்டு எழுத்துக்கள் ஆகும்.

**பயிற்சி**

கீழ்வரும் சொற்களிலும், சொற்றொடர்களிலும் வந்துள்ள உயிர்மெய் யெழுத்துக்களைக் குறில், நெடில், வல்லினம், இடையினம், மெல்லினம் என வகைப்படுத்தி எழுதுக:

சென்ற, சுமார், ஆண்டுகளாக, கணக்கான, மாணவரும், பெற்றோரும், சால, அதை, பேராதரவு, காரணமாக, மாகாண, தாள்களின், காயார், எனவே, தமிழாசிரியர்கள், அனைவரும்.

**வினாக்கள்**

1. உயிரெழுத்துக்களில் எத்தனை வகை உண்டு?

2. சுட்டெழுத்தாவது யாது? சுட்டெழுத்துக்கள் எவை?

3. மூன்று சுட்டெழுத்துக்கள் இருப்பதன் நோக்கம் யாது?

4. வினா வெழுத்துக்கள் எவை?

5. மெய்யெழுத்துக்களை எத்தனை வகையாகப் பிரிக்கலாம்?

6. வல்லின, மெல்லின, இடையின எழுத்துக்கள் எவை?

7. உயிர்மெய்க் குற்றெழுத்துக்களும், உயிர்மெய் நெட்டெழுத்துக்களும் முறையே எத்தனை? எவ்வாறு?

8. வல்லின உயிர்மெய்யெழுத்துக்கள், மெல்லின உயிர்மெய்யெழுத்துக்கள், இடையின உயிர்மெய் யெழுத்துக்கள் தனித்தனி எத்தனை? எவ்வாறு?

# II. சொல்லாக்கம்

சொற்களுள் பகுபதம், பகாப்பதம் என இருவகை உண்டென்று முன் வகுப்பில் படித்திருக்கிறீர்கள்.

கூன் என்னும் சொல்லைப் பொருள் கெடாத வகையில் பிரிக்கமுடியாது. ஆனால் கூனன் என்ற சொல்லை, கூன் + அன் எனப் பொருள் கெடாத வகையில் பிரித்துக் காட்டலாம்.

பொருள் கெடாத வகையில் பிரிக்க இயலாத பதம் பகாப்பதம் ஆகும்.

(உ-ம்) மண், கல், நீர், நிலம்—பெயர்ப் பகாப் பதங்கள்

வா, உண், நட, நில்—வினைப் பகாப்பதங்கள்.

பொருள் கெடாத வகையில் பிரிக்கக்கூடிய பதம் பகுபதம் ஆகும்.

(உ-ம்) கூனன், வலைஞன், மதுரையான், மலையான்—பெயர்ப் பகுபதங்கள்.

உண்டான், வருகிறான்—வினைப் பகுபதங்கள்.

பகுதி: (உ-ம்) வலைஞன் = வலை + ஞ் + அன் இப் பகுபதத்தில் வலை—பகுதி; ஞ்—இடைநிலை; அன்—விகுதி.

உண்டான் = உண் + ட் + ஆன். இதில் உண்—பகுதி; ட் - இடைநிலை ; ஆன் - விகுதி.

பகுபதத்தில் முதலில் நிற்கும் உறுப்பு, பகுதி யாகும்; இறுதியில் நிற்கும் உறுப்பு விகுதியாகும்; இடையில் நிற்கும் உறுப்பு இடைநிலையாகும்.

வலைஞன் என்னும் பெயர்ப் பகுபதத்தில் வலை என்னும் பெயர்ச்சொல் பகுதியாகும்.

உண்டான் என்னும் வினைப் பகுபதத்தில் உண் என்னும் வினைச்சொல் பகுதியாகும். வினைப் பகுதியால் செயலை அறியலாம். வினைப் பகுதிகள் ஏவலாக நிற்கும்.

விகுதி : பகுபதத்தின் ஈற்றில் நிற்கும் உறுப்பு, விகுதி எனப்படும்.

(உ-ம்) கூனன் = கூன் + அன் + (அன் விகுதி ஆண் இனத்தை உணர்த்துகிறது)
கூனி = கூன் + இ (இ விகுதி பெண் இனத்தை உணர்த்துகிறது)
கூனர் = கூன் + அர் (அர் விகுதி பலரை உணர்த்துகிறது)

இவ்வாறு விகுதிகள் பலவகைப்படும். சொற்கள் விகுதியினால் பொருளில் மாறுபடுவதை அறிக.

ஆண் மக்களை உணர்த்தும் விகுதிகள் : அன், ஆன், மான் முதலியன. (உ-ம்) பொன்னன், செய்தான், கோமான்.

பெண்மக்களை உணர்த்தும் விகுதிகள் : அள், ஆள், இ முதலியன. (உ-ம்) குழையள், வந்தாள், பொன்னி.

பலரைக் குறிக்கும் விகுதிகள : அர், ஆர், கள், மார். (உ-ம்) குழையர், செய்தார், குருக்கள், குருமார்.

ஒரு பொருளைக் குறிக்கும விகுதிகள் : து, று. (உ-ம்) அது, வந்தது, ஓடிற்று.

பல பொருளைக குறிக்கும் விகுதிகள் : வை, அ, ஆ என்பன. (உ-ம) அவை, செய்தன, நடவா.

குறிப்பு:— விகுதியால் பால், எண், இடம் இவைகளை அறியலாம்; இதைப்பற்றிப் பின்னர்த் தெரிந்துகொள்வீர்கள்.

**இடைநிலை :** பகுபதத்தில் பகுதிக்கும் விகுதிக்கும் இடையில் நிற்கும் உறுப்பு இடைநிலை ஆகும்.

(உ-ம்.)

செய்தான் = செய் + த் + ஆன்
த் இடைநிலை — தொழில் நடந்ததை உணர்த்துகிறது.

செய்கிறான் = செய் + கிறு + ஆன்
கிறு இடைநிலை — தொழில் நிகழ்வதை உணர்த்துகிறது.

செய்வான் = செய் + வ் + ஆன்
வ் இடைநிலை — தொழில் இனி நடக்கப்போவதை உணர்த்துகிறது.

இவ்வாறு வினைப் பகுபதத்தில் இடைநிலையால் வினையின் காலத்தை அறியலாம்.

பெயர்ப் பகுபதங்களில் வரும் இடைநிலைகள் காலம் காட்டா.

(உ-ம்.) உழுநர் = உழு + ந் + அர்
(ந் இடைநிலை)

அறிஞர் = அறி + ஞ் + அர்
(ஞ் இடைநிலை)

குறிப்பு :—

(i) த், ட், ற், இன்,—இந்த இடைநிலைகள் தொழில் முன்பே நடந்ததைத் தெரிவிக்கும். (உ-ம்.) செய்தான், உண்டான், தின்றான், ஓடினான்.

(ii) கிறு, கின்று, ஆநின்று,—இந்த இடைநிலைகள் தொழில் இப்போது நடைபெறுவதைத் தெரிவிக்கும். (உ-ம்.) செய்கிறான், செய்கின்றான், செய்யாநின்றான்.

(iii) ப், வ்,—இந்த இடைநிலைகள் தொழில் இனி நடக்கப் போவதைத் தெரிவிக்கும். (உ-ம்) தின்பான், செய்வான்.

### பயிற்சி

1. பின்வரும் சொற்களில் பகுதி, விகுதி, இடைநிலைகளைப் பிரித்தெழுதுக:

உண்டான், வேனிலான், ஊணன், உழுதான், மாண்டான், தின்றான், கற்றான், அரசி, ஓடிற்று, செய்கிறாள், பேசினா, உண்பான், உழுவான், காண்கின்றான், ஓதுவார், வலைஞன், பொருநர்.

2. மார், வை, கள், று,—இந்த விகுதிகளைப் பெற்ற பகுபதங்களுக்கு உதாரணம் கொடு.

### வினாக்கள்

1. பகுபதத்தின் முக்கிய உறுப்புக்கள் எவை? விளக்கி வரைக.

2. ஆண்மக்கள், பெண்மக்களைக் குறிக்கும் விகுதிகள் எவை?

3. ஒரு பொருளைச் சுட்டும் விகுதிகளும், பல பொருள்களைச் சுட்டும் விகுதிகளும் எவை?

4. பெயர்ப் பகுபதத்தில் வரும் இடைநிலைக்கும் வினைப் பகுபதத்தில் வரும் இடைநிலைக்கும் வேறுபாடு யாது?

5. (i) தொழில் முன்பு நடந்ததைக் குறிக்கும் இடைநிலைகள் எவை? (ii) தொழில் நடக்கிறதைத் தெரிவிக்கும் இடைநிலைகள் எவை? (iii) தொழில் இனி நடக்கப்போவதைத் தெரிவிக்கும் இடைநிலைகள் எவை?

# III. சொல்

**செந்தமிழ் : கொடுந்தமிழ் :** நம் செந்தமிழ் நாட்டில், பிறமொழிக் கலப்பின்றி இலக்கண வரம்புக்கு உட்பட்டு வழங்கும் தூய தமிழ் செந்தமிழ் ஆகும். சொல்லையும் பொருளையும் அறியக்கூடிய வகையில் தமிழ் மக்கள் ஒப்புக்கொண்டு வழங்கும் சொற்கள் செந்தமிழ்ச் சொற்களாம். ஏனைய சொற்கள கொடுந்தமிழ்ச் சொற்களாகும்.

(உ-ம்.) பொன், மணி, சோறு, யானை — செந்தமிழ்ச் சொற்கள். சொன்றி, தள்ளை, அச்சன் — கொடுந்தமிழ்ச் சொற்கள்.

(சொன்றி - சோறு ; தள்ளை - தாய் ; அச்சன் - தந்தை.)

செந்தமிழ் வழக்கினை அறிந்து உபயோகிப்பது தமிழ் மக்களின் கடமையாகும் ; பேச்சிலும் எழுத்திலும் கொடுந்தமிழ்ச் சொற்களை அறவே விலக்கவேண்டும்.

வடக்கே வேங்கட மலையையும், தெற்கே குமரி முனையையும், கிழக்கிலும் மேற்கிலும் கடலையும எல்லையாகவுடைய நிலப்பகுதியே தமிழ் நாடு என்பர். தமிழ் நாட்டில வேறு மொழிகள் வழங்கினும் அவை அருகியே உள்ளனவாகும்.

தமிழ் நாட்டின் சிற்சில பகுதிகளில் தமிழ்ச் சொற்கள இழிநிலையடைந்து, வழக்கத்தில் வந்துள்ளன. இவைகளும் கொடுந்தமிழ்ச் சொற்களாகும். அவற்றையும் விலக்குதல் வேண்டும்.

பயல், கிழம், கிழடு, சிறுக்கி, வாத்தி முதலிய இகழ்ச்சிச் சொற்களை நீக்கி. முறையே ஐயன், கிழவன், கிழவி, சிறுமி, உபாத்தியாயர் என வழங்கவேண்டும்.

பாயுது, கூவுது, அவங்க, கொடக்கூலி, ஆச்சு, மச்சான் இவ்வாறான சொற்களும் கொடுந்தமிழ்ச் சொற்களாம். இவற்றை நீக்கிச சரியான தமிழ்ச் சொற்களையே வழங்கவேண்டும்.

செந்தமிழ் நாட்டிற்குப் புறம்பாகவுள்ள மலையாளம், கன்னடம், தெலுங்கு முதலிய நாடுகளிலிருந்து தமிழில் வந்து வழங்கும் திசைச் சொற்களும் கொடுந்தமிழ்ச் சொற்களே ஆகும். திசைச் சொற்களைப்பற்றி முந்திய வகுப்பிலேயே கூறப்பட்டுள்ளது.

மரபு: எந்தப் பொருளை, எந்தச் சொல்லால், எந்த முறையில் பழங்காலந்தொட்டு நம் முன்னோர்கள் சொல்லிவந்தார்களோ அப்படியே நாமும் சொல்வது மரபு (பழைய வழக்கம்) ஆகும்.

(உ-ம்) குதிரைக்குட்டி, ஆட்டுக்குட்டி.
பசுவின் கன்று, எருமைக் கன்று.
ஆட்டிடையன், யானைப்பாகன்.
வாழையிலை பனையோலை, தாழைமடல்.

குறிப்பு :— குதிரைக் குஞ்சு, பசுவின் குட்டி, ஆட்டுப் பாகன், வாழையோலை எனக் கூறுதல் மரபு வழுவாகும்.

வழாநிலை: வழுநிலை: நாம் பேசும்பொழுதும் எழுதும் பொழுதும் வாக்கியப் பிழையில்லாமல் இருத்தல் வேண்டும் அதற்காகவே தமிழ் இலக்கணம் கற்கிறோம். வாக்கியம் தவறில்லாமல் சொற்கள் தொடர்ந்து நிற்பது வழாநிலையாம்.

(உ-ம்) அவன் வந்தான் } வழாநிலை
அவள் வந்தாள் }

இலக்கண முறை தவறி வாக்கியச் சொற்கள் தவறாக நிற்பது வழூஉ என்னும் இலக்கணக் குற்றமுள்ளதாம்.

(உ-ம்) அவன் வந்தது
அவர் வந்தாள்
நீர் வந்தார்
நேற்று வருவான் } வழூ நிலை

வழுவமைதி: சில இடங்களில் சில காரணங் கருதி இலக்கணத் தவறு இருப்பினும், அவ்வாறு இருக்கலாமென்று முன்னோர்களால் ஏற்றுக் கொள்ளப்பட்டு வழங்கிவருவது வழுவமைதியாம்.

பசுவின் கன்றைப் பார்த்து, 'என் அம்மை வருகிறாள்' என்று சொல்வது வழூத்தானே? பசுக் கன்றின்மீது வைத்த அன்புகாரணமாக இவ்வாறு கூறப்பட்டதனால் இது வழுவமைதியாயிற்று.

ஏழை ஒருவன் தன் எசமானனை நோக்கி, 'ஐயா, நீங்கள்தாம் என் தாய்.' என்று கூறினால் அது ஆண்பாலைப் பெண்பாலாகக் கூறியதாகும். அவ்வாறு அவன் கூறியது சிறப்பினால் ஆகும். ஆகவே, இது வழுவமைதியாகும்.

வழூஉச் சொற்கள்: தமிழ் மொழியில் பல சொற்கள் உருமாறித் தவறாக வழங்கப்படுகின்றன என்பதும், அப் பிழையான சொற்கள் வழூஉச் சொற்கள் என்றும் முந்திய வகுப்பில் தெரிந்து கொண்டிருக்கிறீர்கள். மேலும் சில வழூஉச் சொற்களும் திருத்தங்களும் கீழே கொடுக்கப்பட்டுள்ளன. அவைகளைத் தெரிந்துகொள்வதால் பேசும் பொழுதும், கட்டுரை எழுதும்போதும் பிழைகள் நேரிடாமல் காத்துக்கொள்ளலாம்.

| பிழை : | திருத்தம் | பிழை : | திருத்தம் |
|---|---|---|---|
| அலமேலு | அலர்மேலு | எடஞ்சல் | இடைஞ்சல் |
| ஆத்துக்கு | அகத்துக்கு | என்னமோ | என்னவோ |
| ஆயிதம | ஆயுதம | ஒட்ரை | ஒட்டடை |
| இடது | இடம | ஒருவள் | ஒருத்தி |
| இரும்பல் | இருமல | கம்பிளி | கம்பளி |
| ாா்கருளி | ாா்கொல்லி | குத்துயிர் | குற்றுயிர் |
| உடமை | உடைமை | தெத்துவாய் | தெற்றுவாய் |
| உடம்படிக்கை | உடனபடிககை | நாத்தம | நாறறம் |

வழக்கு : இதுபற்றி முந்திய வகுப்பில் படித்ததை நினைவுகூருங்கள். சொற்கள வழங்கும் முறைக்கு வழக்கு என்பது பெயர். அஃது இயல்பு வழக்கு (இயல்பாய் வருவது), தகுதி வழக்கு (இடத்துக்குத் தக்கதாயுள்ளது) என இருவகைப்படும். மேலுஞ் சில விவரங்களை இங்கே காண்போம்.

1. இயல்பு வழக்கு : நிலம், வீடு, சோறு, மக்கள் என்று வழங்கும் சொற்கள் இலக்கண விதிக்கு மாறுபடாது வருதலால் இவை இலக்கண முடையன எனப்படும்.

2. இல்வாய், நகர்ப்புறம், கால்வாய் என்னும் சொற்கள் வாயில், புறநகர், வாய்க்கால் என முன் பின்னாக மாறிவருவதால் இவை இலக்கணப்போலி எனப்படும்.

தசை, சதையெனவும், கோவில், கோயில் எனவும் வருவனவும் இலககணப் போலியாகும். இவற்றுள் எழுத்துககள் மாறியுள்ளன.

3. தஞ்சாவூர், யானை, பெயர், யார் என்னும் சொற்கள் தஞ்சை, ஆனை, பேர், ஆர் எனச் சொல் வடிவு மாறி மருவிவருவதால் இவை மரூஉ எனப்படும்.

இவ்வாறு, இயல்பு வழக்கு இலக்கணமுடையது, இலக்கணப்போலி, மரூஉ என மூவகைப்படும்.

தகுதி வழக்கு: 1. பெரியோர்முன் சொல்லத் தகாத இடக்கர் ஆன சொற்களை மறைத்து வேறு வகையால் வழங்குவது இடக்கர் அடக்கல் எனப்படும்.

(உ-ம்) வாய் பூசி வந்தான்.
(வாய் கழுவிவந்தான்)
குழந்தை கொல்லைக்குப் போயிற்று.
(மலங்கழித்தது)

2. மங்கலமல்லாத சொல்லை நீக்கி மங்கலமான சொல்லை வழங்குவது மங்கலம் எனப்படும்.

(உ-ம்) துஞ்சினர் (இறந்தார்)
வெள்ளாடு (காராடு)
மங்களவாரம் (செவ்வாய்க்கிழமை)

3. ஒரு கூட்டத்தார், சில சொற்களுக்கு பொருளைப் பிறர் அறியக்கூடாதவாறு வேறு சொற்களைக் குறிப்பாக வழங்குவது குழூஉக்குறி எனப்படும்.

(உ-ம்) குணவெள்ளை (மூன்று ரூபாய்)
மதி வெள்ளை (ஒரு ரூபாய்)
ஆகாசப் பால் (கள்)

இவ்வாறு, தகுதி வழக்கு இடக்கரடக்கல், மங்கலம், குழூஉக்குறி என மூவகைப்படும்.

### பயிற்சி

1. கீழ்வருவனவற்றிற்கு நேரான செந்தமிழ்ச் சொற்களைக் கூறுக:

கிழடு, பயல், அவங்க, கூவுது, தள்ளை, சொன்றி, கண்ணுலம், நாத்தம்.

2. மரபு வழூஉக்களைக் கண்டறிந்து திருத்துக:
வாழையோலை, கீரிக்குஞ்சு, யானைஆயன், ஆட்டுப் பாகன்.

3. பின் வருவனவற்றில் காணும் வழூஉக்களைத் திருத்தி எழுதுக:

நீர் வந்தார். நேற்று வருவான். மாடுகள் மேய்ந்தது.

4. கீழ்வரும் வழூஉச்சொற்களுக்குத் திருத்தமான சொற்கள் கூறுக:
வேணும், குத்துயிர், இரும்பல், அலமேலு, தெத்துவாய், மாத்திணன், பாவக்காய், துகை, தீவட்டி, சீக்காய், அம்மாஞ்சி.

5. பின் வருவனவற்றிலிருந்து போலி, மரூஉ, மங்கலம், குழூஉக்குறி இவற்றுக்கான உதாரணங்களை எடுத்தெழுதுக:
துஞ்சினார், பறி, ஆனை, தஞ்சை, வாய்க்கால், சதை, குணவெள்ளை, வெள்ளாடு.

### வினாக்கள்

1. செந்தமிழ், கொடுந்தமிழ், — வேறுபாட்டை விளக்குக.

2. மரபு என்பது யாது? உதாரணங்களால் விளக்குக.

3. வழுவமைதிக்கு இரண்டு உதாரணங்கள் தருக.

4. வழக்கு எத்தனை வகைப்படும்? அவை ஒவ்வொன்றின் உட்பிரிவுகள் எவை?

## பெயர்ச்சொல்

**பெயர்ச்சொல் வகை:** ஏதேனும் ஒன்றன் பெயரைக் குறித்து நிற்கும் சொல் பெயர்ச்சொல் ஆகும என்றும், பெயர்ச்சொற்கள் பொருட் பெயர், இடப் பெயர், காலப் பெயர், சினைப் பெயர், பண்புப் பெயர், தொழிற் பெயர் என ஆறு வகைப்படும் என்றும் முந்திய வகுப்பில் தெரிந்துகொண்டிருக்கிறீர்கள். எண்ணுப் பெயரைப்பற்றியும் ஆங்குக் கூறப்பெற்றுளளது.

குறிப்புப் பெயர்:

(உ-ம்) இராமன் மிதிலைக்குச் சென்றான். இராமன் வில்லை ஒடித்தான். இராமன் சீதையை மணந்துகொண்டான். சீதை அழகிற் சிறந்தவள். சீதை இராமனிடம் அன்புகொண்டவள்.

இராமன் மிதிலைக்குச் சென்றான். அவன் வில்லை ஒடித்தான். அவன் சீதையை மணந்து கொண்டான். சீதை அழகிற் சிறந்தவள். அவள் இராமனிடம் அன்புகொண்டவள்.

இராமன என்று அடுத்தடுத்துக் கூறுவதற்குப் பதிலாகப் பிந்திய வாககியங்களில் அவன் என்னும் சொல் நிற்பதைக் கவனியுங்கள். அவ்வாறே சீதை என்னும் சொல்லுக்குப் பதிலாக அவள் என்னும் சொல் வந்துள்ளதையும் அறிக.

இராமன் என்பதற்குப் பதிலாக வந்துள்ள அவன் என்பது ஆங்கிலமுறைப்படி பிரதி பெயர்ச் சொல் எனப்படும் அவ்வாறே அவள் என்பதும் பிரதி பெயர்ச்செல் ஆகும. ஆனால் தமிழ் இலக்கண முறைப்படி அவன், அவள், அவர், அது போன்ற சொற்கள் சுட்டுப்பெயர்கள் ஆகும்.

பொன்னன், மதுரையான் சித்திரையான், கண்ணன், நல்லோன், நடையன் என்பன வினைமுற்றாக வராமல் தனிப்பெயராக இருக்கும் போது அவைகளைக் குறிப்புப் பெயர் எனக் கூறலாம்.

**பொதுக் குறிப்பு :** பாட இயலில் குறிப்புப்பெயரை Pronoun (பிரதி பெயர்ச்சொல்) என்று குறிப்பிட்டிருப்பதைக் காண்க.

**திணை :**

**கண்ணப்பர்** சிறந்த அன்பர்.
சிதம்பரத்தில் **நடராசர்** எழுந்தருளியிருக்கிறார்.
**யானை** பெரிய மிருகம்.
இந்தக் **கல்** கனமானது.

இவ்வாக்கியங்களில் **கண்ணப்பர்** என்னும் சொல் மக்களில் ஒருவர் பெயரையும், **நடராசர்** என்னும் சொல் ஒரு கடவுளின் பெயரையும், **யானை** என்னும் சொல் ஒரு மிருகத்தின் பெயரையும், **கல்** என்னும் சொல் ஒரு உயிரில்லாப் பொருளின் பெயரையும் உணர்த்துகின்றன. மக்களும் தேவர்களும் பகுத்தறிவு உள்ளவர்களாதலால், இவர்களை உயர்ந்த குலமாகவும், மற்ற உயிருள்ளவும் உயிரற்றவுமான பொருள்களை உயர்வல்லாத குலமாகவும் கூறப்பெறும். ஆதலால்,

உலகத்திலுள்ள பொருள்கள் அனைத்தும் தமிழ் இலக்கணத்தில் உயர்திணை, அஃறிணை என இரு பெரும் பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன.

குறிப்பு : திணை = குலம், வகுப்பு. உயர்திணை — உயர்வாகிய திணை. அஃறிணை (அல் + திணை) — உயர்வு அல்லாத திணை.

**உயர்திணை :** மக்களையும் தேவர்களையும் குறிக்கும் சொற்கள் உயர்திணைப் பெயர்கள் ஆகும்.

(உ-ம்) கோவலன், கண்ணகி, மனிதன், அரசன் — மக்கள் பெயர்கள்.

இந்திரன், கலைமகள் — தேவர் பெயர்கள்.

அஃறிணை: தேவர், மக்கள் அல்லாத உயிருள்ள பொருள்களையும் உயிரற்ற பொருள்களையும் குறிக்கும் சொற்கள் அஃறிணைப் பெயர்கள் ஆகும்.

(உ-ம்) பசு, கிளி, மீன், பல்லி, தென்னை — உயிருள்ள பொருள்களின் பெயர்கள்.

புத்தகம், கல், மண், நீர், நெருப்பு, காற்று, வானம் — உயிரில்லாத பொருள்களின் பெயர்கள்.

குறிப்பு: கடவுள் இருக்கிறார். கடவுள் இருக்கிறது.
சூரியன் உதித்தான். சூரியன் உதித்தது.

இவ்வாறு கடவுள் பெயர்கள் இரு திணைகளிலும் அமைந்து வருவதும் உண்டு.

பால்:

இராமன், சீதை, மனிதர்கள்,
புலி, மரங்கள்

இவற்றுள் இராமன் என்ற சொல் ஓர் ஆண் மகனைக் குறிக்கிறது; ஆகையால் ஆண்பால். சீதை என்ற சொல் ஒரு பெண்மகளைக் குறிக்கிறது; ஆகையால் பெண்பால். மனிதர்கள் என்ற சொல் பல மனிதர்களைக் குறிக்கிறது; ஆகையால் பலர்பால். புலி என்ற சொல் அஃறிணையில் ஒரு பொருளைக் குறிக்கிறது; ஆகையால் ஒன்றன்பால். மரங்கள் என்ற சொல் அஃறிணையில் பல பொருளைக் குறிக்கிறது; ஆகையால் பலவின்பால்.

இவ்வாறு, திணையின் உட்பிரிவு பால் என்று வழங்கப்பெறும் (பால்—பகுப்பு, பிரிவு).

ஆண்பால், பெண்பால், பலர்பால், ஒன்றன்பால், பலவின்பால் எனப் பால் ஐந்து வகைப்படும்.

குறிப்பு: ஆண்பால், பெண்பால், பலர்பால் இம்மூன்றும் உயர்திணைக்குரியன; ஒன்றன்பால், பலவின்பால் இவ்விரண்டும் அஃறிணைக்குரியன.

**ஆண்பால்:** உயர்திணையில் ஓர் ஆணைக் குறித்து நிற்குஞ் சொல் ஆண்பால் ஆகும்

(உ-ம்) கோவலன், அரசன், உழவன், சிறுவன்.

**பெண்பால்:** உயர்திணையில் ஒரு பெண்ணைக் குறித்து நிற்குஞ் சொல் பெண்பால் ஆகும்.

(உ-ம்) சீதை, அரசி, உழத்தி, சிறுமி.

**பலர்பால்:** உயர்திணையில் பலரைக் குறித்து நிற்குஞ் சொல் பலர்பால ஆகும்.

(உ-ம்) மக்கள, அரசர்கள், உழவர்கள், சிறுமிகள்.

குறிப்பு: உயர்திணையில் ஆணாயினும், பெண்ணாயினும், இவ்விருவர் கலந்தாயினும் ஒருவருக்கு மேறபட்டவா பலர்பாலே யாவர்.

**ஒன்றன்பால்:** அஃறிணையில் ஒரு பொருளைக் குறித்து நிற்குஞ் சொல் ஒன்றன்பால் ஆகும்.

(உ-ம்) பசு, புறா, சேவல், புத்தகம்.

குறிப்பு: அஃறிணையில் சில உயிருள்ள பொருள்களுக்கு ஆண், பெண் என்ற பிரிவு இருந்தாலும், அவை ஆண்பால், பெண்பால் என வழங்கப்படுவது இல்லை. ஆகவே இவற்றைப் பால் பகா அஃறிணைப் பெயர்கள் என்பர்.

**பலவின்பால்:** அஃறிணையில் பல பொருள்களைக் குறித்து நிற்குஞ் சொல் பலவின்பால் ஆகும்.

(உ-ம்) மாடுகள், கோழிகள், மலைகள், மரங்கள்.

## பயிற்சி

1. கீழ்வரும் வாக்கியங்களிலுள்ள பெயர்ச்சொற்களுக்குத் திணையும் பாலும் கூறுக:

1. கந்தன் கிளியை வளர்த்தான்.
2. அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்.
3. பெட்டைக்கோழி முட்டையிடும்.
4. சிவகாமி படம் வரைகிருள்.
5. மாடுகள் வயலில் மேய்கின்றன.
6. அரசியலார் மக்களை ஆதரித்தல்வேண்டும்.

2. ஆண்பால் பெயர்களும் பெண்பால் பெயர்களும் இவைகளில் கலந்திருக்கின்றன. ஒவ்வொரு ஆண்பால் பெயரையும் எடுத்தெழுதி, அதற்குப் பொருத்தமான பெண்பால் பெயரையும் நேராக எழுதுக:

செல்வி, குருடன், தோழி, மைத்துனன், தலைவி, ஒருவன், பாக்கியவதி, நாயகன், கூலிக்காரி, யாவன், உழவன், குருடி, மைத்துனி, உழத்தி, தலைவன், யாவள், பாக்கியவான், நாயகி, கூலிக்காரன், பேர்த்தி, யுவதி, தோழன், பேரன், யுவன், செல்வன், ஒருத்தி.

எண் :

மனிதன் — மனிதர்கள்
மாடு — மாடுகள்
புத்தகம் — புத்தகங்கள்

இவற்றுள் மனிதன், மாடு, புத்தகம் என்பன ஒவ்வொன்றும் ஒவ்வொரு பொருளையே குறிக்கின்றன; ஆகலால் ஒருமை எண் ஆகும். மனிதர்கள், மாடுகள், புத்தகங்கள் என்பன ஒவ்வொன்றும் பல பொருள்களைக் குறிக்கின்றன; ஆகலால் பன்மை எண் ஆகும்.

இவ்வாறு, பொருளின் எண்ணிக்கையினைத் தெரிவிப்பது எண் ஆகும்.

எண் ஒருமை, பன்மை என இரண்டுவகைப்படும்.

ஒருமை: பொருள்களுள் ஒன்றைக் குறிக்குஞ் சொல் ஒருமை ஆகும்.

(உ-ம்.) சிறுவன், மரம், கல்.

பன்மை: பொருள்களுள் பலவற்றைக் குறிக்குஞ் சொல் பன்மை ஆகும்.

(உ-ம்.) சிறுவர்கள், மரங்கள், கற்கள்.

குறிப்பு: ஆண்பால், பெண்பால், ஒன்றன்பால் இம்மூன்றும் ஒருமை எண்ணை உணர்த்தும்; பலர்பால், பலவின்பால் இவ்விரண்டும் பன்மை எண்ணை உணர்த்தும்.

**இடம்:**

நான் இன்று வந்தேன்.
நீ எப்பொழுது வந்தாய்?
இராமன் என்ன கூறினான்?

இவ் வாக்கியங்களில் பேசுவோன் நான் என்ற சொல்லால் தன்னைக் குறிப்பிடுகிறான்; நீ என்ற சொல்லால் முன்னே நிற்கிறவனைக் குறிப்பிடுகிறான்; இராமன் என்ற சொல்லால் தானும், முன்னிற்பவனும் அல்லாத வேறொருவனைக் குறிப்பிடுகிறான். ஆகையால் நான் என்பது தன்மை இடம்; நீ என்பது முன்னிலை இடம்; இராமன் என்பது படர்க்கை இடம்

சொற்கள் வழங்கிவரும் இடத்தைக் குறிப்பது இடம் ஆகும்.

அது தன்மை, முன்னிலை, படர்க்கை என மூன்று வகைப்படும்.

தன்மை இடம்: பேசுவோனையும், அவனைச் சேர்ந்தவர்களையும் குறித்து நிற்குஞ் சொல் தன்மை இடம் ஆகும்.

(உ-ம்) யான், நான்—தன்மை ஒருமை.
யாம், நாம், யாங்கள், நாங்கள்—தன்மைப் பன்மை.

முன்னிலை இடம்: பேசக் கேட்போனையும், அவனைச் சார்ந்தோரையும் குறித்து நிற்குஞ் சொல் முன்னிலை இடம் ஆகும்.

(உ-ம்) நீ—முன்னிலை ஒருமை.
நீர், நீவிர், நீங்கள்—முன்னிலைப் பன்மை.

குறிப்பு: தன்மை, முன்னிலைப்பெயர்கள் ஒருமை பன்மைகளை உணர்த்துமேயன்றித் திணை பால்களை உணர்த்தமாட்டா. அவை இருதிணைக்கும் ஐம்பாலுக்கும் பொதுவாக வருதலின் பொதுப் பெயர்கள் என்றும் பெயர்பெறும்.

படர்க்கை இடம்: தன்மை, முன்னிலை அல்லாத மற்ற எல்லாப் பொருள்களையும் குறித்து நிற்குஞ் சொல் படர்க்கை இடம் ஆகும்.

(உ-ம்) அவன், அவள், அது, பறவை
—படர்க்கை ஒருமை.
அவர்கள், அவைகள், பறவைகள்
—படர்க்கைப் பன்மை.

குறிப்பு: படர்க்கைப் பெயர்கள் திணை, பால், எண் இவற்றை நன்கு வெளிப்படையாக உணர்த்தி நிற்கும்.

### பயிற்சி

கீழ்வரும் வாக்கியங்களிலுள்ள பெயர்ச்சொற்களுக்கு எண்ணும் இடமும் கூறுக:

1. நாங்கள் அவர்களுடன் பந்து விளையாடினோம்.
2. யானைகள் கரும்பைத் தின்னும்.
3. நானும், நீயும், அவளும் கோயிலுக்குச் சென்றோம்.
4. தமிழ் நாடே நமது தாய்நாடு.
5. மரங்கள் சோலையில் அடர்ந்திருக்கின்றன.
6. நான் உனது தந்தையைக் கண்டேன்.

**வினாக்கள்**

1. திணை, பால், எண், இடம், இவை தனித் தனி எத்தனை வகைப்படும்? அவை எவை?

2. உயர்திணைக்குரிய பால்கள் எவை? அஃறிணைக் குரிய பால்கள் எவை?

3. பலர்பாலுக்கும் பலவின்பாலுக்குமுள்ள வேறுபாடு யாது?

4. ஒருமை எண்ணுக்குரிய பால்கள் எவை? பன்மை எண்ணுக்குரிய பால்கள் எவை?

5. இடமாவது யாது?

6. தன்மை இடம், முன்னிலை இடம் இவற்றிற்குத் தனித்தனி உரிய சொற்கள் எவை?

7. தன்மை முன்னிலைப் பெயர்கள் ஏன் பொதுப் பெயர் எனப்படும்?

---

**வேற்றுமை :** முருகன் பார்த்தான்.
முருகனைப் பார்த்தான்.

இவ்விரண்டு வாக்கியங்களிலும் முருகன் என்ற பெயர்ச்சொல் வந்துள்ளது. முதல வாக்கியத்தில், பார்த்தலாகிய தொழிலைச் செய்பவன் முருகன்; ஆகையால் முருகன் என்பது எழுவாய்ப் பொருளில் வந்தது. இரண்டாவதில், பார்த்தலாகிய தொழிலை அடையும் பொருளாக இருப்பவன் முருகன். ஆகையால், முருகனை என்பது செயப்படுபொருளில் வந்தது. இவ்வாறு,

பெயரின் பொருளை வேறுபடுத்திக் காட்டுவது வேற்றுமையாகும்.

பெயர்ச்சொல்லோடு கூடி நின்று பொருளை வேறுபடுத்திக் காட்டும் சொற்கள் வேற்றுமை உருபு எனப்படும்.

| | |
|---|---|
| முருகன் வந்தான். | 1-ம் வேற்றுமை |
| முருகனைக் கண்டேன். | 2-ம் ,, |

| | | |
|---|---|---|
| முருகனால் வீடு கட்டப்பட்டது. | 3-ம் | ,, |
| முருகனுக்குப் புத்தகம் தந்தான். | 4-ம் | ,, |
| முருகனின் கந்தன் சிறியவன். | 5-ம் | ,, |
| முருகனது பசு. | 6-ம் | ,, |
| முருகனிடம் பணம் இருந்தது. | 7-ம் | ,, |
| முருகா! பாடம் படி. | 8-ம் | ,, |

இவ்வாறு வேற்றுமை எட்டு வகைப்படும்.

முதல் வேற்றுமை: எவ்விதமான மாறுபாட்டையும் அடையாமல் இயல்பாக நிற்கும் பெயர்ச் சொல்லே முதல் வேற்றுமை ஆகும். இதற்குத் தனியாக உருபுகள் இல்லை.

(உ-ம்) கண்ணம்மாள் கோலம் போடுகிறாள்.
மரங்கள் செழித்து வளர்ந்துள.

குறிப்பு. முதல் வேற்றுமைச் சொல்லே ஒரு வாக்கியத்தில் எழுவாயாக வரும். ஆகையால், அது எழுவாய் வேற்றுமை என்றும் வழங்கப்பெறும்.

இரண்டாம் வேற்றுமை: இரண்டாம் வேற்றுமைக்கு 'ஐ' என்பது உருபாகும்.

(உ-ம்) கண்ணன் மாடுகளை மேய்த்தான்.
உழவன் வயலை உழுகிறான்.

இவற்றுள் மாடுகள், வயல் என்ற பெயர்ச் சொற்கள் ஐ என்ற உருபை ஏற்று இரண்டாம் வேற்றுமை ஆயின.

குறிப்பு: இரண்டாம் வேற்றுமைச் சொல்லே ஒரு வாக்கியத்தில் செயப்படுபொருளாக வரும். ஆகையால், அது செயப்படுபொருள் வேற்றுமை என்றும் வழங்கப்பெறும்.

மூன்றாம் வேற்றுமை: மூன்றாம் வேற்றுமைக்கு 'ஆல், ஆன், ஒடு, ஓடு' என்பன உருபுகளாகும். கொண்டு, உடன் என்ற சொல் உருபுகளும் மூன்றாம் வேற்றுமை உருபுகளாக வரும்.

(உ-ம்) கண்ணாடியால் வளையல் செய்யப்பட்டது.
அறத்தான் வருவதே இன்பம்.
தந்தையோடு மகனும் வந்தான்.
கோவலனுடன் கண்ணகியும் மதுரை சென்றாள்.

இவற்றுள் கண்ணாடி முதலிய பெயர்ச் சொற்கள் ஆல், ஆன், ஒடு, உடன் முதலிய உருபுகளை ஏற்று மூன்றாம் வேற்றுமை ஆயின.

**நான்காம் வேற்றுமை:** நான்காம் வேற்றுமைக்கு 'கு' என்பது உருபு ஆகும். ஆக, பொருட்டு, நிமித்தம் என்ற சொல் உருபுகளும் நான்காம் வேற்றுமை உருபுகளாக வரும்

(உ-ம்) கூழுக்குப் பாடியவர் ஔவையார்.
வளையலுக்காகப் பொன் வாங்கினேன்.
வேலையின் பொருட்டு அலைந்து திரிந்தான்.
தொழில் நிமித்தம் சென்னைக்குச் சென்றேன்.

இவற்றுள் கூழ் முதலிய பெயர்ச்சொற்கள் கு, ஆல், பொருட்டு, நிமித்தம் முதலிய உருபுகளை ஏற்று நான்காம் வேற்றுமை ஆயின.

**ஐந்தாம் வேற்றுமை:** ஐந்தாம் வேற்றுமைக்கு 'இல், இன்' என்பன உருபுகளாகும். நின்று, இருந்து என்ற சொல் உருபுகளும் ஐந்தாம் வேற்றுமை உருபுகளாக வரும்.

(உ-ம்) விலங்குகளில் பெரியது யானை.
முருகனின் வேலன் பெரியவன்.
எள்ளிலின்றும் எண்ணெய் எடுக்கலாம்.
பெட்டியிலிருந்து பணத்தை எடுத்தான்.

இவற்றுள் விலங்குகள் முதலிய பெயர்ச்சொற்கள் இல், இன், நின்று, இருந்து முதலிய உருபுகளை ஏற்று ஐந்தாம் வேற்றுமை ஆயின.

**ஆறாம் வேற்றுமை:** ஆறாம் வேற்றுமைக்கு 'அது' என்பது உருபாகும். உடைய என்ற சொல் உருபு ஆறாம் வேற்றுமை உருபாக வரும்.

(உ-ம்) வள்ளுவரது நூல் திருக்குறள்.
நமது நாடு தமிழ் நாடு.
முருகனுடைய ஊர் பழனி.
கோவலனுடைய வரலாறு சிலப்பதிகாரம்.

இவற்றுள் வள்ளுவர் முதலிய பெயர்ச் சொற்கள் அது, உடைய என்ற உருபுகளை ஏற்று ஆறாம் வேற்றுமை ஆயின.

ஏழாம் வேற்றுமை: ஏழாம் வேற்றுமைக்கு 'இல், கண், இடம், மேல்' முதலியன உருபுகள் ஆகும்.

(உ-ம்) பெட்டியில் பணம் இருக்கிறது.
சபையின்கண் ஏறிப் பேசப் பழகு.
குழந்தைகளிடம் அன்பாக இரு.
மரத்தின்மேல் ஏறினான்.

இவற்றுள் பெட்டி முதலிய பெயர்ச் சொற்கள் இல், கண், இடம், மேல் என்ற உருபுகளை ஏற்று ஏழாம் வேற்றுமை ஆயின.

எட்டாம் வேற்றுமை: எட்டாம் வேற்றுமைக்குத் தனியே உருபுகள் இல்லை. பெயர்ச்சொல்லின் ஈறு திரிதல், ஈற்றில் ஏகாரம் மிகுதல், ஈறு கெடுதல், ஈறு கெட்டு அயல் எழுத்துத் திரிதல், இயல்பாக நிற்றல் முதலிய வேறுபாடுகளைப் பெற்றுவரும். (ஈறு—கடைசி; திரிதல்—மாறுபடுதல்)

(உ-ம்.) தம்பீ! நீயே வகுப்பில் சிறந்தவன். — தம்பி என்பதன் ஈற்றில் உள்ள இ, ஈ எனத் திரிந்தது.

மகனே! உன் கடமையைச் செய். — மகன் என்பதன் ஈற்றில் ஏ மிகுந்து வந்தது.

நண்ப! எனக்கு ஒரு புத்தகம் கொடு. — நண்பன் என்பதன் ஈற்றெழுத்துக் கெட்டது.

சுந்தரா! எழுந்துவா — சுந்தரன் என்பதன் ஈற்றெழுத்துக்கெட்டு அயலெழுத்துத் திரிந்தது.

பிள்ளைகாள்! நீங்களே வருங்காலச் செல்வங்கள். — பிள்ளைகள் என்பதன் ஈற்று அயலெழுத்துத் திரிந்தது.

முருகன்! நன்று உன் செய்கை. — முருகன் என்பது இயல்பாக நின்றது.

**குறிப்பு :** 1. எட்டாம் வேற்றுமை, படர்க்கை இடத்தில் இருப்பவைகளை நேர்முகமாக விளிப்பதாகும். ஆகையால் அது **விளி வேற்றுமை** என்றும் வழங்கப்பெறும். (விளித்தல்-அழைத்தல்)

2. அருகிலிருப்பவரை அழைப்பது அண்மை விளி எனப்படும். (அண்மை-அருகு)

(உ-ம்) கந்த! நேற்று ஏன் வரவில்லை?

தூரத்திலுள்ளவர்களை அழைப்பது சேய்மை—விளி எனப்படும். (சேய்மை—தூரம்)

(உ-ம்.) கந்தா! இங்கே வா.

தன்மைப் பெயர்களும், முன்னிலைப் பெயர்களும், தான், தாம் என்னும் பொதுப் பெயர்களும் எட்டாம் வேற்றுமையை ஏற்றுவரமாட்டா.

### பயிற்சி

1. கீழ்க்கண்ட சொற்களில் ஐ, ஆல், கு, இன், உடைய, இல் (இடம்) இவ்வுருபுகளைச் சேர்த்து எழுதுக :

புலி, மரம், கை, சங்கரன், காவிரி.

2. பின்வரும் வாக்கியங்களில் வந்துள்ள பெயர்ச் சொற்களின் வேற்றுமைகளை எடுத்து எழுதுக :

1. வேலன் வேகமாய் ஓடுகிருன்.
2. ஏழைகளுக்குக் கொடுப்பதே ஈகை யாகும்.
3. பூவோடு சேர்ந்த நாரும் மணம் பெறும்.
4. முருகா ! கோடரியால் மரத்தை வெட்டு.
5. நான் கந்தனேடு சென்னையை அடைந்தேன்.
6. கல்வியில் பெரியவர் கம்பர்.
7. பூனை தனது குட்டியை வாயால் கௌவியது.
8. நண்ப ! என் தந்தையைக் கண்டாயா ?

### வினுக்கள்

1. வேற்றுமை என்பது யாது? அது எத்தனை வகைப்படும் ?

2. உருபு இல்லாத வேற்றுமைகள் எவை ? ஒரே உருபினைமட்டும் கொண்ட வேற்றுமைகள் எவை ?

3. இரண்டு வேற்றுமையில் பயின்றுவரும் ஓர் உருபு எது ?

4. இவற்றிற்கு வேறு பெயர்கள் கூறுக : முதல் வேற்றுமை, இரண்டாம் வேற்றுமை, எட்டாம் வேற்றுமை.

5. இருவகை விளிகள் எவை ? உதாரணங்களால் விளக்குக.

6. எட்டாம் வேற்றுமை எவ்வெவ்வாறு மாறுபட்டு வரும் ?

**வினைச்சொல் :**

மழை பெய்கிறது.
வரதன் வந்தான்.
கோகிலம் பாடுகிறாள்.

இவற்றுள் பெய்கிறது, வந்தான், பாடுகிறாள் என்ற சொற்கள் மழை முதலியவற்றின் தொழிலை உணர்த்தி நிற்கின்றன. இவ்வாறு தொழிலைக் குறித்து நிற்கும் சொல் **வினைச்சொல்** எனப்படும். ஆதலால்,

**ஒரு பொருளின் தொழிலைக் குறித்து நிற்கும் சொல் வினைச்சொல் ஆகும்.** (வினை—தொழில்)

வினைச் சொல்லுக்குள்ள இலக்கணம்: வினைச் சொல் வேற்றுமை ஏற்காது; ஆனால் திணை, பால், எண், இடம் இவைகளைக் காட்டுவதுடன் காலத்தையும் காட்டும்.

உதாரணமாக, **வந்தான்** என்ற வினைச்சொல் உயர்திணை, ஆண்பால், ஒருமை எண், படர்க்கை இடம் என்பனவற்றைக் காட்டுதலோடு, இறந்த காலத்தையும் காட்டி நிற்றல் அறிக.

**காலம் :**

இராமன் உண்டான்.
இராமன் உண்கிறான்.
இராமன் உண்பான்.

இவற்றுள் உண்டான் என்பது தொழில் முன்னமே நடந்துவிட்டது என்பதையும், உண்கிறான் என்பது தொழில் இப்பொழுது நடக்கிறது என்பதையும், உண்பான் என்பது தொழில் இனி நடக்கப்போகிறது என்பதையும் உணர்த்துகின்றன.

ஒரு தொழிலின் நிகழ்ச்சி எப்பொழுது என்பதைக் குறிப்பது காலம் ஆகும்.

இறந்தகாலம், நிகழ்காலம், எதிர்காலம் எனக் காலம் மூவகைப்படும்.

குறிப்பு: பெரும்பாலும் இடைநிலைகளால் காலத்தை அறியலாம். இடைநிலை—சொற்களின் இடையில் நிற்கும் ஓர் உறுப்பாகும்.

**இறந்தகாலம்:** தொழில் முன்னமேயே நடந்து விட்டது என்பதைக் குறிப்பது இறந்த காலம் ஆகும்.

இறந்த காலத்தைக் காட்டும் இடைநிலைகள் த், ட், ற், இன் என்பனவாம்.

(உ-ம்) செய்தான் [செய் + த் + ஆன்]
உண்டான் [உண் + ட் + ஆன்]
தின்றான் [தின் + ற் + ஆன்]
ஆடினான் [ஆடு + இன் + ஆன்]

**நிகழ் காலம்:** தொழில் இப்பொழுது நடக்கின்றது என்பதைக் குறிப்பது நிகழ்காலம் ஆகும்.

நிகழ் காலத்தைக் காட்டும் இடைநிலைகள் கிறு, கின்று என்பனவாம்.

(உ-ம்) எழுதுகிறான் [எழுது + கிறு + ஆன்]
பேசுகின்றான் [பேசு + கின்று + ஆன்]

**எதிர்காலம்:** தொழில் இனிமேல் நடக்கும் என்பதைக் குறிப்பது எதிர்காலம் ஆகும்.

எதிர்காலத்தைக் காட்டும் இடைநிலைகள் ப், வ் என்பனவாம்.

(உ-ம்) தின்பான் [தின் + ப் + ஆன்]
செல்வான் [செல் + வ் + ஆன்]

முற்று வினை : எச்ச வினை :

சென்ற மனிதனை இராமன் கூப்பிட்டான்.
கண்ணன் வந்து நின்றான்.

இவற்றுள் சென்ற, கூப்பிட்டான், வந்து, நின்றான் இவை ஒவ்வொன்றும் தொழிலை உணர்த்துவதால் வினைச்சொற்களாம்.

கூப்பிட்டான், நின்றான் என்பன பொருள் முடிந்து நிற்கின்றன. ஆகையால், பொருள் முடிவு பெற்று நிற்கும் வினைச்சொல் முற்றுவினை அல்லது வினை முற்று ஆகும்.

சென்ற, வந்து என்பனவற்றின் பொருள்கள் முற்றுப்பெறவில்லை. பொருள் முற்றுப்பெறாமல் குறை வினையாய் நிற்கும் வினைச்சொல் எச்சவினை எனப்படும். (எச்சம் = குறைபாடு)

### வினைமுற்று வகைகள்

தெரிநிலை வினை : குறிப்பு வினை :

முருகன் சென்றான்.
ஆசிரியர் கற்பிக்கிறார்.
கோபாலன் உண்பான்.

சென்றான், கற்பிக்கிறார், உண்பான் என்னும் வினைச் சொற்கள் தொழிலையும் காலத்தையும் வெளிப் படையாக உணர்த்துகின்றன. ஆதலால், இவை தெரிநிலை வினை எனப்படும்.

இது வேறு. அவர் இல்லை.
அந்தப் பாதை கெடிது. அவன் மதுரையான்.

வேறு, நெடிது, இல்லை, மதுரையான் என்னும் வினைச்சொற்கள் தொழிலையும் காலத்தையும் வெளிப்படையாக உணர்த்தவில்லை. ஆதலால் இவை குறிப்பு வினை எனப்படும்.

தொழிலும் காலமும் வெளிப்படையாகத் தோன்ற நிற்பது தெரிநிலை வினையாம். தொழிலும் காலமும் வெளிப்படையாகத் தோன்றுமல் குறிப்பால் உணர நிற்பது குறிப்பு வினையாம்.

செயப்படுபொருள் குன்றுவினை :

செயப்படுபொருள் குன்றியவினை :

(உ-ம்.) ஆறுமுகம் மரம் வெட்டினுன்.

இந்த வாக்கியத்தில் வெட்டினுன் என்னும் வினையை நோக்கி, 'எதை வெட்டினுன்?' என்று வினவுங்கால் மரம் என்னும் விடை கிடைக்கிறது. அதாவது, வெட்டுதலாகிய தொழிலின் பயனை ஏற்பது மரம். ஆதலால் மரம் செயப்படுபொருள் எனப்படும்.

செயப்படுபொருளை உடைய வெட்டினுன் என்னும் வினை செயப்படுபொருள் குன்றுவினை எனப்படும். ஆதலால்

செயப்படுபொருளைப் பெற்றுவரும் வினைச்சொல் செயப்படுபொருள் குன்றுவினை எனப்படும்.

(உ-ம்.) திருடன் விரைவாக ஓடினுன்.

இந்த வாக்கியத்தில் எதை 'ஓடினுன்?' என்று வினவினுல், விடையில்லை. அதாவது இவ்வினைக்குச் செயப்படுபொருள் இல்லை. ஓடினுன் என்னும் வினை செயப்படுபொருள் குன்றிய வினை ஆகும்.

செயப்படுபொருளைப் பெறாத வினைச்சொல் செயப்படுபொருள் குன்றிய வினை எனப்படும்.

(உ-ம்.) யானை கரும்பைத் தின்கிறது (செய்வினை); கரும்பு யானையால் தின்னப்பட்டது (செயப்பாட்டு வினை).

கருத்தாவின் தொழிலை நேரே தெரிவிக்கும் வினை செய்வினையாம். கருத்தா செய்யும் தொழிலைச் செயப்படுபொருள் அடைவதைத் தெரிவிக்கும் வினை செயப்பாட்டு வினையாம்.

குறிப்பு : *செயப்பாட்டு வினையின் இடையில் படு என்னும் உறுப்பு சேர்ந்து வருவதைக் காண்க.*

உடன்பாட்டுவினை : எதிர்மறைவினை :

அவன் படித்தான்.
அவள் உண்டாள். } உடன்பாட்டு வினை

அவன் படித்திலன்.
அவள் உண்ணாள். } எதிர்மறை வினை

தொழிலின் நிகழ்ச்சியைத் தெரிவிக்கும் வினை உடன்பாட்டு வினையாம். தொழில் நிகழாமையைத் தெரிவிக்கும் வினை எதிர்மறை வினையாம்.

குறிப்பு : *உடன்பாட்டு வினையை **விதி வினை** என்றும், எதிர்மறை வினையை **மறை வினை** என்றும் கூறுவதுண்டு.*

தன்வினை : பிறவினை :

மணிவாசகன் வந்தான். (தன் வினை)

மணிவாசகன் புத்தகங்களை வருவித்தான். (பிறவினை)

சிற்பிகள் கோயிலைக் கட்டினர். (தன் வினை)

அரசன் கோயிலைக் கட்டுவித்தான். (பிறவினை)

கருத்தா தானே செய்வதை உணர்த்தும் வினை தன்வினை.

கருத்தா பிறரைக்கொண்டு செய்விக்கும் வினை பிறவினை.

### வினையெச்ச வகைகள்

உண்ட பையன்
உண்கின்ற பையன்
உண்ணும் பையன்

இவற்றில், உண்ட, உண்கின்ற, உண்ணும் இவை எச்ச வினைகள். இந்த எச்ச வினைகள் பையன் என்ற பெயர்ச்சொல்லைக்கொண்டு முடிவதால் இவை பெயரெச்சம் எனப்படும்.

பெயரைக் கொண்டு முடிந்து நிற்கும் எச்சவினை பெயரெச்சம் ஆகும்.

உண்டு வந்தான்
படிக்கப் போகிறான்
படித்து வருவான்

இவற்றில் உண்டு, படிக்க, படித்து என்ற எச்சவினைகள் முறையே வந்தான், போகிறான், வருவான் என்ற வினைச்சொற்களைக்கொண்டு முடிவதால் இவை வினையெச்சம் எனப்படும்.

வினையைக்கொண்டு முடிந்து நிற்கும் எச்சவினை வினையெச்சம் ஆகும்.

குறிப்பு:—வினையெச்சம் வினையையே அல்லாமல், பெயரெச்சம் வினையெச்சம் இவற்றைக்கொண்டும் முடியும்.

(உ-ம்.) வந்து நின்ற பையன் (பெயரெச்சத்தைக்கொண்டு முடிந்தது.)

ஓடி வந்து கூறினான் (வினையெச்சத்தைக்கொண்டு முடிந்தது.)

**ஒரு பொருள் பல சொற்கள் பொருளில் நுட்பமாக வேறுபடுதல்:**

தமிழ் ஒரு செம்மொழி. சில சொற்கள் ஒரே பொருளைக் குறிப்பனபோல் தோன்றினும், ஊன்றிக் கவனிக்குங்கால் அவை ஒவ்வொன்றும பொருளில் நுட்பமாக வேறுபடும். ஆதலால் ஒரே பொருளுக்கு அதைக் குறிப்பிட இரண்டு அல்லது அதிகமான சொற்கள் நம் மொழியில் இல்லையென்பது மிகையாகாது.

(உ-ம்.) 1. ஏடு, தோடு, இதழ், மடல் என்பன பூ இதழைக் குறிக்கும் பல சொற்களாகும். ஆனால் ஏடு எனும் சொல் பனம்பூவுக்குரியதாய் வரும்; தோடு என்பது பனை, தென்னை, தாழை இவற்றின் பூவுக்குரியதாய் வரும்; மடல் என்னும் சொல்லைக் கமுகு, வாழை, தாழை இவற்றின் பூக்களுக்கு உரியதாக்கிக் கூறவேண்டும்.

2. மலை, வரை இவ்விரு சொற்களும் மலையைக் குறிக்கும் என்றாலும் மூங்கில் மிகுதியாக வளர்ந்துள்ள மலையைத்தான் வரை என்பது குறிப்பதாகும்.

3. கரி, தும்பி, யானை, தந்தி இவை யானையைக் குறிக்கும் பல சொற்கள் ஆகும். தந்தி என்பது தந்தத்தையுடைய ஆண்யானையைக் குறிக்கும். தும்பிக்கை யுடையதால் தும்பி; கருமை நிற முடையதால் கரி என்ற பெயர்கள் வந்துள்ளன.

இவ்வாறு இவை ஒவ்வொன்றும் ஒரு காரணம்பற்றி வந்ததை யறிக.

## பயிற்சி

1. மூக்கால வினைகளுக்கும் தனித்தனி ஐந்து உதாரணங்கள் தருக.

2. (i) பின் வரும் வினைச் சொற்கள் ஒவ்வொன்றின் காலத்தைக் குறிப்பிடு. (ii) அதிலுள்ள இடைநிலையை எடுத்துக் காட்டு:

இருக்கின்றது, படிப்பான், உரைத்தான், நடிக்கின்றான், தருவர், நாடினான், சென்றான், வருவேன்.

3. பின்வரும் வாக்கியங்களிலுள்ள வினைமுற்று, பெயரெச்சம், வினையெச்சம் இவற்றைப் பொறுக்கி எழுதுக :

வந்த பையன் விரைந்து ஓடினான்.
அவன் படித்த பாடம் கேட்டு மகிழ்ந்தேன்.
பெரியாரைக் கண்டு வணங்கி நின்றான்.
கிழிந்த ஆடையைத் தைத்துக் கட்டு.

4. தெரிநிலை வினைமுற்று, குறிப்பு வினைமுற்று,— இவற்றுக்குத் தனித்தனி ஐந்து உதாரணங்கள் தருக.

5. எதிர்மறை வினை கூறுக :
உறங்கு, இரு, வந்தான், வருவான், செய்வேன்,

6. பிறவினை கூறுக :
காட்டினான், செய், தா, ஓடினான், பயிலுகிறான்.

## வினாக்கள்

1. வினைமுற்று எத்தனை வகைப்படும்? உதாரணங்களால் விளக்குக.

2. எச்ச வினையாவது யாது? அது எத்தனை வகைப்படும்? அவை எவை?

3. செயப்படுபொருள் குன்றியவினை, செயப்படுபொருள் குன்றாவினை,— உதாரணங்களால் விளக்குக.

4. செய்வினை, செயப்பாட்டு வினை இவை எவ்வாறு வேறுபடும்?

5. இறந்த காலம், நிகழ்காலம், எதிர்காலம்,— இவற்றைக் காட்டும் இடைநிலைகள் எவை?

# IV. புணர்ச்சி

முந்திய வகுப்பில் விவரிக்கப்பட்டுள்ள புணர்ச்சி விதிகளை மறுபார்வையாகப் படித்தறியுங்கள். மற்றுஞ் சில புணர்ச்சி விதிகளை இங்கு அறிவோம்.

நிலைமொழி ஈற்றெழுத்தும் வருமொழி முதல் எழுத்தும் ஒன்றுபடச் சேருவது புணர்ச்சியாகும்.

(உ-ம்.) பந்து + ஆடினான் = பந்தாடினான்.

**உயிர்முன் உயிர் :**

| | | |
|---|---|---|
| (உ-ம்.) படி + அரிசி = படியரிசி | | இடையில் |
| தீ + அவித்தான் = தீயவித்தான் | | ய் வந்தமை |
| புகை + இலை = புகையிலை | | காண்க. |

இ, ஈ, ஐ என்னும் உயிரெழுத்துக்களுக்குமுன் உயிரெழுத்து வந்தால், இடையில் ய் என்னும் மெய்யெழுத்துத் தோன்றும்.

| | |
|---|---|
| (உ-ம்.) பல + அடி = பலவடி | |
| பலா + இலை = பலாவிலை | இடையில் |
| திரு + அடி = திருவடி | வ் |
| பூ + எடுத்தாள் = பூவெடுத்தாள் | வந்தமை |
| தே + ஆரம் = தேவாரம் | காண்க. |

அ, ஆ, உ, ஊ, எ, ஏ, ஒ, ஓ, ஔ,—இந்த எழுத்துக்களின் முன் உயிர் வந்தால் இடையில் வ் என்னும் மெய் தோன்றும்.

ஏ முன் உயிர் வந்தால் சில விடங்களில் ய் என்னும் மெய்யும் தோன்றும்.

(உ-ம்.) பொன்னே + அழகு = பொன்னேயழகு.

**குறிப்பு :** நிலைமொழியீற்றில் உயிர் நின்று, வருமொழி முதலில் உயிர் வந்தால் இரண்டு மொழிகளும் பொருந்தாமல் விட்டிசைத்து நிற்கும். ஆதலால், இவ்விரு மொழிகளையும் உடன்படுத்த இடையில் வரும் மெய் உடம்படுமெய் எனப்படும். ய், வ் இவ்விரண்டும் உடம்படுமெய்யாக வரும்.

**உயிர்முன் மெய் :**

(உ-ம்) பலா + காய் = பலாக்காய்
படிக்க + சென்றாள் = படிக்கச்சென்றாள்
தேரடி + தெரு = தேரடித்தெரு
கொட்டை + பாக்கு = கொட்டைப்பாக்கு

நிலைமொழியீற்றிலுள்ள உயிரின் முன் க, ச, த, ப வந்தால், அவ்வல்லின ஒற்றுப் பெரும்பாலும் மிகுந்துவரும்.

**மெய்முன் உயிர் :**

(உ-ம்) தேன் + இனிது = தேனினிது
கடல் + அலை = கடலலை
வேல் + எறிந்தான் = வேலெறிந்தான்

நிலைமொழியீற்றிலுள்ள மெய்யின்முன் வருமொழி முதலில் உயிர் வந்தால் அவ்வுயிர் மெய்யோடு கூடி ஒன்றாய் வரும்.

**மெய்முன் மெய் :**

(உ-ம்) சினம் + கொண்டான் = சினங்கொண்டான் (ங்)
இடம் + சிறிது = இடஞ்சிறிது (ஞ்)
வனம் + தழைத்தது = வனந்தழைத்தது (ந்)

நிலைமொழியீற்றிலுள்ள மகர மெய்யின் முன் வருமொழி முதலில் க, ச, த வரின், மகர மெய் அவைகளுக்குரிய இனவெழுத்தாகத் திரிந்துவரும்.

**அ, இ, எ முன் உயிரும் யகரமும் வரப் புணர்தல் :**

அ, இ என்ற சுட்டெழுத்துக்களின் முன்னும், எ என்ற வினாவெழுத்தின் முன்னும், உயிரும், யகரமும் வந்தால், இடையில் வகரமெய் தோன்றி நிற்கும்.

(உ-ம்.)

1. அ + அணில் — அவ்வணில்
   இ + உயிர் — இவ்வுயிர்
   எ + ஊர் — எவ்வூர்

   } வருமொழி முதலில் உயிர் வருதல

2. அ + யானை — அவ்யானை
இ + யானை — இவ்யானை
எ + யானை — எவ்யானை
} வருமொழி முதலில் யகரம் வருதல்.

**வலிமிகும் இடங்கள்:** வலிமிகும் இடங்கள் சில முதற் படிவப் பகுதியில் (பக்கம் 30, 31 பார்க்க) கூறப்பட்டுள. மேலும் சிலவற்றை இங்குக் காண்போம்.

**1. இரண்டாம் வேற்றுமை விரியிலும், நான்காம் வேற்றுமை விரியிலும் வல்லினம் மிகுதல்:**

*நிலைமொழி இறுதியில் இரண்டாம் வேற்றுமை உருபும், நான்காம் வேற்றுமை உருபும் வெளிப்பட்டு நின்றால் அவற்றின் முன் வரும் க, ச, த, ப என்ற வல்லினம் மிகுந்து நிற்கும்.*

(உ-ம்.) கந்தனை + கண்டேன் — கந்தனைக் கண்டேன்.
முருகனை + பார்த்தேன் — முருகனைப் பார்த்தேன்.
} இரண்டாம் வேற்றுமைக்கு முன் வலி மிகுந்தது.

வேலனுக்கு + கொடு — வேலனுக்குக் கொடு.
இராமனுக்கு + தந்திடு — இராமனுக்குத் தந்திடு.
} நான்காம் வேற்றுமைக்கு முன் வலி மிகுந்தது.

**2. வினையெச்சம், ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம் ஆகிய இவற்றின் முன் வல்லினம் மிகும்.**

(உ-ம்.) 1. ஓடி + போ = ஓடிப்போ.
காண + சென்றான் = காணச் சென்றான்
} வினையெச்சத்தின் முன் வலி மிகுந்தது.

2. ஓடா + குதிரை = ஓடாக்குதிரை
பறவா + பட்சி = பறவாப் பட்சி
} ஈறுகெட்ட எதிர்மறைப்பெயரெச்சத்தின் முன் வலி மிகுந்தது.

[illegible]. ய் என்னும் மெய்யின் முன்னும் வல்லினம் மிகும்.

(உ-ம்.) நெய் + குடம் = நெய்க்குடம்.
வேர் + கடலை = வேர்க்கடலை.
முழு + பயன் = முழுப்பயன்.

வல்லினம் இரட்டிக்குமிடங்கள்: டு, று இந்த எழுத்துக்களை ஈற்றிலுடைய சொற்களின்முன் மெய் வரின் உகரம் ஏறிய மெய் பெரும்பாலும் இரட்டிக்கும்; சில இடங்களில் உயிர் வரினும் இரட்டிக்கும்.

(உ-ம்.) ஆடு + கால் — ஆட்டுக்கால்
வயிறு + வலி — வயிற்றுவலி } மெய்வர இரட்டியது.
வறடு + ஆடு — வறட்டாடு
ஆறு + ஓரம் — ஆற்றோரம் } உயிர் வர இரட்டியது.

### எண்ணுப்பெயர்ப் புணர்ச்சி

ஒன்று, இரண்டு, மூன்று முதலியன எண்ணுப் பெயர்களாகும். எண்ணுப் பெயர்கள் ஒன்றோடொன்றும், பிற பெயர்களோடும் இணைந்து வரும்போது புணரும் முறைகளாவன:

1. ஒன்று + மாடு = ஒரு மாடு
ஒன்று + வண்டி = ஒரு வண்டி
ஒன்று + ஆயிரம் = ஓராயிரம்
ஒன்று + ஆடு = ஓராடு

ஒன்று என்னும் எண்ணுப் பெயர் வருமொழியோடு புணரும்பொழுது ஈற்றிலுள்ள உயிர்மெய் கெட்டு, னகரம் ரகரமாய்த் திரியும்.

வருமொழி முதல் மெய்யாயின் ரகரம் உகரம் பெறும் (ஒன்று - ஒரு); உயிராயின் உகரம் பெறாது முதல் நீளும் (ஒன்று = ஓர்).

2. இரண்டு + மாடுகள் = இருமாடுகள்
இரண்டு + வீடுகள் = இருவீடுகள்
இரண்டு + அம்பு = ஈரம்பு
இரண்டு + அரசர் = ஈரரசர்

வருமொழி முதல் மெய்யாயின் இரண்டு என்னும் எண்ணுப் பெயரில் ரகர ஒற்று மட்டுமே நின்று உகரம் பெறும் (இரண்டு = இரு); வருமொழி முதல் உயிராயின் ரகர ஒற்று உகரம் பெறாது முதல் நீளும். (இரண்டு = ஈர்)

3. மூன்று + காலம் = முக்காலம்
மூன்று + ஆடுகள் = மூவாடுகள்

மூன்றுமுன் வகரம் வந்தால் முதல் குறுகாமையும் ஆம்.

(உ-ம்) மூன்று + வகை = மூவகை.

வருமொழி முதல் மெய்யாயின் மூன்று என்பது முதல் குறுகி, ஈறு கெட்டு, னகரம் வருகிறமெய் யாகத் திரியும்; வருமொழி முதல் உயிராயின் ஈற்றுயிர்மெய்யும் னகரமும் கெடும்.

4. நான்கு + பத்து = நாற்பது
நான்கு + ஆயிரம் = நாலாயிரம்

நான்கு என்னும் எண்ணுப் பெயர் ஈறு கெட்டு, னகரம் லகரமாகவும், றகரமாகவும் திரிந்து புணரும்.

5. ஐந்து + மூன்று = ஐம்மூன்று — வருகிற மெய்யாகிறது
ஐந்து + தலை = ஐந்தலை } வருகிற மெய்க்கேற்ற
ஐந்து + கலம் = ஐங்கலம் } இனமாகத் திரிந்தது
ஐந்து + ஆயிரம் = ஐயாயிரம் } எல்லாம் கெட்டு, தனித்து நின்றது

ஐந்து என்னும் எண்ணுப் பெயர் ஈறு கெட்டு நகரம், வந்து சேரும் பெயர்மெய்யேனும், அதற்கு இனமாகவேனும் மாறும்; உயிர் வரின் நகரம் கெடும்.

6. ஆறு + பழங்கள் = ஆறு பழங்கள்
ஆறு + முறை = அறுமுறை

ஆறு என்னும் எண்ணுப் பெயர் புணர்கையில் இயல்பாக நிற்றலும் உண்டு; முதல் எழுத்துக் குறுகலும் உண்டு.

7. எழு + ஆட்கள் = எழாட்கள் —ஈற்றுகரம் கெட்டது
எழு + மடங்கு = எழுமடங்கு—முதல் குறுகியது
எழு + மலை = எழுமலை —முதல் குறுகவில்லை

ஏழு என்னும் எண் புணரும்போது உயிர் வரின் ஈற்றுகரம் கெடும்; மெய்வரின் முதற் குறுகலும், குறுகாமையும் ஆகும்.

8. எட்டு + நூறு — எண்ணூறு } டகரம் ணகரமாயிற்று
எட்டு + ஆயிரம் — எண்ணாயிரம்
எட்டு + மாதம் — எட்டு மாதம்
எட்டு + பேர்கள் — எட்டுப்பேர்கள்
எட்டு + ஆள் — எட்டாள்

எட்டு என்னும் எண் உயிரும் மெய்யும் முதலாக உடைய எண்ணுப் பெயர்கள் வந்தால் ஈறுகெட்டு, டகரம் ணகரமாகும் உயிராகவோ, மெய்யாகவோ உடைய மற்றைய சொற்கள் வரின் இயல்பாகும்.

9. ஒன்பது + மரம் = ஒன்பதுமரம்
ஒன்பது + நரி = ஒன்பதுநரி
ஒன்பது + பத்து = தொண்ணூறு

இவை போன்று ஒன்பது என்னும் எண்ணுப் பெயர் புணர்ந்து வருவதைத் அறிக.

| | |
|---|---|
| பத்து + ஒன்று = பதினொன்று | பத்து + ஆறு = பதினாறு |
| பத்து + மூன்று = பதின்மூன்று | பத்து + ஏழு = பதினேழு |
| பத்து + நான்கு = பதினான்கு | பத்து + எட்டு = பதினெட்டு |
| பத்து + ஐந்து = பதினைந்து | பத்து + ஆயிரம் = பதினாயிரம் |

பத்து என்னும் எண்ணுப் பெயருடன் ஒன்று, மூன்று, நான்கு, ஐந்து, ஆறு, ஏழு, எட்டு, ஆயிரம், ஆகிய எண்ணுப் பெயர்கள்வரின் ஈறுகெட்டு இன் சாரியை பெரும்பாலும் தோன்றும்.

(உ-ம்.) பத்து + இரண்டு = பன்னிரண்டு.

பத்து என்னும் எண்ணுப் பெயருடன் இரண்டு என்னும் மற்றோர் எண்ணுப் பெயர்வரின் ஈற்றுயிர் மெய் கெட்டுத் தகர மெய் னகர மெய்யாகும்.

| | |
|---|---|
| 11. இரண்டு + பத்து = இருபது | ஆறு + பத்து — அறுபது |
| மூன்று + பத்து = முப்பது | ஏழு + பத்து — எழுபது |
| நான்கு + பத்து = நாற்பது | எட்டு + பத்து — எண்பது |
| ஐந்து + பத்து = ஐம்பது | |

இரண்டு முதல் எட்டு ஈறாகிய எண்களுடன் பத்து என்னும் எண் வந்தால், பத்து என்னும் சொல்லின் நடு எழுத்துக் கெடும். (பத்து = பது)

### பயிற்சி

1. பிரித்தெழுதுக: தேவாரம், தேனினிது, இடஞ்சிறிது, எவ்வூர், இவ்யானை, வரட்டாடு, ஆற்றோரம், மூவாட்கள், ஐங்கலம், எண்ணாயிரம், பதினைந்து, நாற்பது.

2. சேர்த்தெழுதிப் புணர்ச்சி விதி கூறுக:

பனை + ஓலை ; திரு + அடி ; படி + அரிசி ; கடல் + அலை ; அவ் + யானை ; பழத்தை + தின்றான் ; மதுரைக்கு + சென்றேன் ; அ + அணில் ; நூல் + ஆடை ; வயிறு + வலி எட்டு + ஆடுகள் ; நான்கு + ஆயிரம்.

## வினாக்கள்

1. உடம்படுமெய் என்றால் என்ன? அவை யாவை?

2. வலிமிகும் இடங்கள் நான்கு கூறி, உதாரணங்களும் தருக.

3. எகர வினாவுடனும் மூச்சுட்டுடனும் உயிரும் யகரமும் வருமொழி முதலாக வருமாயின் எங்ஙனம் புணரும்? உயிரும் யகரமும் நீங்கலாக ஏனைய எழுத்துக்கள் வரின் எங்ஙனம் புணரும்?

4. வல்லினம் இரட்டிக்குமிடங்கள் எவை?

5. பத்து என்னும் எண்ணுப் பெயருடன் நான்கு, இரண்டு இந்த எண்கள் சேரும்பொழுது முறையே என்ன மாறுதல்கள் ஏற்படும்?

6. இரண்டு முதல் எட்டு வரையிலான எண்களுடன் பத்து என்னும் எண்ணுப்பெயர் சேரும்பொழுது முறையே ஏற்படும் எண்ணுப் பெயர்களை எழுதுக.

7. இவை ஒவ்வொன்றும் சேரும்பொழுது ஏற்படும் மாறுதல்களை விளக்கிக் கூறுக:

| | | | | |
|---|---|---|---|---|
| நான்கு | + | பத்து | = | நாற்பது |
| ஐந்து | + | மூன்று | = | ஐம்மூன்று |
| ஆறு | + | முறை | = | அறுமுறை |
| இரண்டு | + | அரசர் | = | ஈரரசர் |
| ஒன்று | + | ஆடு | = | ஓராடு |

# V. அணி

வசனத்தையும் செய்யுளையும் அழகுசெய்து நிற்பது அணியாகும். (அணி—அழகு)

**உவமை அணி :**

(உ-ம்.) பவளம்போல் சிவந்த வாய்

இதில் வாயின் சிவப்பு நிறத்தைப் பவளத்தின் சிவப்பு நிறத்தோடு ஒப்பிட்டுக் கூறியிருக்கிறது. இது உவமை யணி ஆகும்.

ஒரு பொருளைக் கூறும்போது அதற்கு ஒப்பாக வேறொரு பொருளைக் கூறி, இரண்டு பொருள்களுக்கும் ஒப்புமை விளங்கச் சொல்வது உவமை அணி யாகும்.

உவமை அணிக்கு **உவமானம், உவமேயம், பொதுத்தன்மை, உவம உருபு** என நான்கு உறுப்புக்கள் உண்டு.

ஒரு பொருளுக்கு உவமையாகக் கூறப்படுவது **உவமானம்.** அதனால் உவமிக்கப்படும் பொருள் **உவமேயம்.** இவ்விரண்டிற்கும் ஒப்பாகவுள்ள பொதுவான தன்மை **பொதுத்தன்மை.** உவமையை விளக்க இடையில் வரும் **போல, அன்ன** முதலியன **உவம உருபு.**

மேற்கூறிய உதாரணத்தில் பவளம் உவமானம்; வாய் உவமேயம்; சிவப்பு நிறம் பொதுத்தன்மை; போல்,—உவம உருபு.

**உருவகம்:** உவமானத்தையும் உவமேயத்தையும் ஒன்றாகவே கருதி ஒற்றுமைப்படுத்திக் கூறுவது உருவகம் ஆகும்.

(உ-ம்.) திருவடித் தாமரை
சொல் அமுதம்

இவற்றில் பாதங்களைத் தாமரை மலராகவே கூறியிருக்கிறது; சொல்லை அமுதமாகவே கூறியிருக்கிறது. திருவடித்தாமரை = திருவடியாகிய தாமரை; சொல் அமுதம் = சொல்லாகிய அமுதம்.

குறிப்பு: உவமையணியில் உவமானம் முன் நிற்கும்; உவமேயம் பின் நிற்கும். உருவக அணியில் உவமேயம் முன் நிற்கும்; உவமானம் பின் நிற்கும்.

### பயிற்சி

1. உவமை அணிக்கு ஐந்து உதாரணங்களும், உருவக அணிக்கு ஐந்து உதாரணங்களும் கூறுக.

2. கயல் கண், முகில் குழல், வில் புருவம், குமுத வாய் — இவை ஒவ்வொன்றிலும் உவமையணி உறுப்புக்கள் தோன்றி நிற்கும்படி விளக்கி எழுதுக.

3. மேற்காட்டிய உதாரணங்களையே உருவக அணியாக அமைத்து விளக்கிக் காட்டு.

4. கீழ்க்கண்டவற்றுள் உள்ள உவமேயம், உவமானம், உவம உருபுகள் இவைகளைக் கூறுக:

1. இப்பழம் சர்க்கரைபோல் இனிக்கும்.
2. என் நாய் புலிபோலப் பாய்ந்தது.
3. கந்தன் கும்பகர்ணனைப்போன்று உறங்கினான்.
4. "நற்றாமரைக் கயத்தில் நல்லன்னம் சேர்ந்தாற்போல்
கற்றாரைக் கற்றாரே காமுறுவர்."

### வினாக்கள்

1. அணியாவது யாது?
2. உவமையணியாவது யாது?
3. உருவக அணி எப்படி வரும்?
4. உவமை அணியில் அமையும் உறுப்புக்கள் எவை?
5. உவமையணிக்கும் உருவக அணிக்கும் உள்ள வேறுபாடு யாது?

# VI. நிறுத்தற் குறிகள்

எழுதுவதில் நிறுத்தற் குறிகள் இடுவதின் தேவையையும், முற்றுப்புள்ளி, அரைப்புள்ளி, காற்புள்ளி, வினாக் குறி, உணர்ச்சிக் குறி இவைகளின் உபயோகத்தையும் முந்திய படிவத்தில் படித்திருக்கிறீர்கள். அவைகளை மறுபார்வையாக அறிவதுடன், மேலும் சில நிறுத்தற் குறிகளைப் பற்றி இங்கு அறிவோம்.

. இது முற்றுப்புள்ளி. செய்தி வாக்கியங்களின் இறுதியிலும், கட்டளை வாக்கியங்களின் இறுதியிலும் இக் குறியை இடவேண்டும். முற்றுப்புள்ளி இடப்பட்ட இடங்களில் நான்கு மாத்திரை நேரம் நிறுத்தவேண்டும்.

(உ-ம்) பரதன் சித்திரகூடம் சென்றான்.
இளமையில் கல்.

சொற்களின் சுருக்கமாக எழுத்துக்களை உபயோகிக்கும்பொழுது அவ்வெழுத்துக்களின் பின் முற்றுப்புள்ளி இடவேண்டும்.

(உ-ம்) ம. த. சுந்தரம் பிள்ளை, எம். ஏ.

மன்னார்குடி என்பதன் சுருக்கம் ம.
தங்கவேலுப் பிள்ளையின் சுருக்கம் த.
ஆகவே, இரண்டுக்கும் பின்னர் முற்றுப்புள்ளி இடப்பட்டிருக்கிறது.

; இஃது அரைப்புள்ளி. இப்புள்ளி இடப்பட்டுள்ள இடங்களில் இரண்டு மாத்திரை நேரம் நிறுத்தவேண்டும் ஒரே எழுவாயைக்கொண்ட பல வாக்கியங்கள் அடுத்தடுத்து வருமிடங்களில் ஒவ்வொரு பயனிலையின் கடைசியிலும் அரைப்புள்ளி இடுதல்வேண்டும்.

(உ-ம்) (i) அநுமான் இலங்கைக்குச் சென்றான்; சீதையைக் கண்டான்; இராமரிடம் திரும்பினான்.

(iii) ஆசிரியர் வகுப்புக்குள் வந்தார்; நாற்காலியில் அமர்ந்தார்; புத்தகத்தை எடுத்தார்; போதிக்கத் தொடங்கினர்

இது **காற்புள்ளி**. இப் புள்ளியுள்ள இடங்களில ஒரு மாத்திரை நேரம் நிறுத்தவேண்டும்.

**காற்புள்ளி இடுமிடங்கள்:**

(i) ஒரே வாக்கியத்தி பல பெயர்ச் சொற்கள் தொடர்ந்து நிற்கும்பொழுது

(உ-ம்.) 1. பூனை, நாய், பசு, ஆடு, மாடு, குதிரை இவை வீட்டு மிருகங்கள்.

(ii) ஒரே வாக்கியத்தில் பல வினையெச்சங்கள் வரும்பொழுது

(உ-ம்.) 2. மணிவாசகன் பாடசாலைக்குச் சென்று, புத்தகங்களை எடுத்து, பாடங்களைப் படித்துவிட்டு, ஆசிரியரிடம் விடை பெற்றுக்கொண்டு வீடு திரும்பினன்.

(iii) விளியாக வரும் ஒரு பொருளுக்குப் பிறகு

(உ-ம்.) 3 குழந்தாய், அழாதே.
அம்மா, சாதம் போடு.

: இக்குறி **முக்காற் புள்ளி**. இப்புத்தகத்தில் பல [illegible]களில் இப்புள்ளியிட்டிருப்பதைக காணுங்கள். படிக்கும்பொழுது இக்குறியுள்ள இடங்களில் மூன்று மாத்திரை நேரம நிறுத்தவேண்டும்.

[illegible] [illegible]ற்கோளை எடுத்துக்கூறுமிடத்திலும்,

(உ-ம்.) 1 [illegible]ரம் உரைப்பது: உண்மையே பேசு;

[illegible]

[illegible] [illegible]றார்: தந்தை தாய்ப் பேண்.

[illegible] [illegible]த்திலும்

(உ-ம்.) 1 [illegible]க்கள்: அ, இ, உ.

2. பாண்டவர்கள் [illegible]: தருமன், பீமன், அர்ச்சுனன் நகுலன், சகாதேவன்.

[illegible]காற்புள்ளி [illegible].

### பயிற்சி

1. காற்புள்ளி, அரைப்புள்ளி, மூக்காற்புள்ளி இவைகளை அமைத்து, தனித்தனி மூன்று வாக்கியங்கள் எழுதுக.

2. பொருத்தமான நிறுத்தற் குறிகள் அமை :

(i) திரு மா தணிகைவேல் பிஏ எல் டி
25 மாடவீதி மயிலை

(ii) கமலம் அம்மா இந்த மலர்களைப் பார் என்ன அழகு அவைகளைப் பறிக்கலாமா

(iii) நானிலமாவன குறிஞ்சி முல்லை மருதம் நெய்தல்

(iv) கதிரவன் காலையில் உதிக்கிறான் நடுப்பகலில் வான உச்சியை அடைகிறான் மாலையில் மேற்கே மறைகிறான்

(v) நன்மை செய்தவர் நன்மை அடைவர் தீமை செய்தவர் தீமை அடைவர்

(vi) திருடன் வீட்டை அடைந்தான் கதவைத் திறந்தான் உட்சென்றான் பணத்தைத் திருடினான் தப்பி ஓடினான்

### வினாக்கள்

1. அரைப்புள்ளி, மூக்காற்புள்ளி இவைகளை முறையே எங்கெந்த இடங்கள் இடவேண்டும்? இக் குறிகள் காணுமிடங்களில் எவ்வளவு மாத்திரை நேரம் நிறுத்தவேண்டும்?

2. முற்றுப்புள்ளியைச் சிறப்பாக உபயோகிக்கும் இடம் எது?

3. காற்புள்ளி இடுமிடங்கள் மூன்று கூறுக.

---

Sri Mahabharatham Press, Kumbakonam. November, 1951.